MASTER NEGATIVE NUMBER

6133.84

குமரன்

ஆரம் 5, முத்து 33

March 29, 1928

Record no. 313

Kumaraṉ

Āram 5, muttu 33

March 29, 1928

Record no. 313

Registered No. M. 1823
Tel: KUMARAN, KARAIKUDI.

உ

சிவமயம்.

தனிப்பிரதி
விலை அணா ஒன்றரை.

குமரன்

"என்கடன் பணிசெய்து கிடப்பதே."

(வாரப் பதிப்பு.)


வியாழன் தோறும் வெளியிடப்பெறுவது.

" கதரே உயிர். " " கருணையே தெய்வம். "

ஆரம் ரு. } காரைக்குடி பிரபவ - ஹு பங்குனி - மீ கஎ - உ (29—3—28) { முத்து ௬௬.

அநுமனது அன்பின்திறம்.

திருவாளர் ரா. பி. சேதுப்பிள்ளை பி. ஏ. பி. எல்.

அநுமன் அயோத்தி அண்ணல்பால் இடையறாப் பேரன்பு வாய்ந்து விளங்கினன். அவனது ஆணையைத் தலைமேற்கொண்டு ஆர்வத்தோடு இயற்றினன். இத்தகைய அன்பும் ஆர்வமும் அநுமனிடம் அமைந்திருந்ததை யறிந்த இராமன் அவனைத் தன் ஆருயிர்த் துணைவனாகவே கருதி ஒன்றையும் கரவாது அவனிடம் உரைத்தான். திருமகளாய சீதையைத் தேடுமாறு அநுமனைத் தென்திசைக்கு அனுப்பியபோது அம்மங்கையின் அங்க நலங்களை ஒவ்வொன்றாக அவனிடம் இராமன் அறிவித்தான். இன்னும் தானும் சீதையுமேயன்றி, வேறெவரும் அறியாத மறைகளை இராமன் அநுமனிடம் எடுத்துரைத்தான். பின்னும் தலைசிறந்த அடையாளமாகிய கணையாழியையும் அவன்பால் ஒப்புவித்தான். இவ்வாறு இராமன் தன்பால்வைத்த தலையாய அன்பிற்கும், தகைமைக்கும், தக்கவாறு அநுமன் அவனது சேவையில் உடலும் உயிருமாக ஈடுபட்டு நின்றான். அருங்கடலைக் கடந்து இலங்கைமாநகர் எய்திய அநுமன் அங்குள்ள மாடமாளிகைகளில் வாழ்ந்த அரக்கரையெல்லாம் பொதுவுற நோக்கிப் போந்தான். அந்நகரில் எங்கும் சீதையைக் காணாது சிந்தை கலங்கி அந்தோ இரக்கமற்ற இவ்வரக்கன் இராமனது தேவியைக் கொன்றானோ, அன்றி இலங்கைக்கும் அப்பாலுள்ள சிறையில் செறித்தானோ, ஒன்றும் அறியாது உழல்கின்றேனே இங்கு நின்றும் இராமனிடம் சென்று சீதையைக் காணேன் என்று கலங்காதுரைப்பேனோ? அத்திருமகளைக் காணப்பெறின் உயிர்வாழ்வேன், இன்றேல் இலங்கையை வேரோடு பறித்துக் கருங்கடலில் தாழ்த்து அரக்கர் அனைவரையும் அழித்து நானும் மாள்வேன் என்று தன் உள்ளத்தில் எண்ணினன். அந்நிலையில் அநுமன் அருகேயிருந்த அழகிய அசோக வனத்தைக் கண்ணுற்றான். அம்மணிமலர்ச் சோலையின் கண்ணும் மங்கையைக் காணாதிருப்பின் உயிர் நீப்பதாக உறுதிகொண்டான். அநுமன் இராமன்பால் வைத்த அன்பினால் அப்பெருமானது தேவியைத் தன் ஆவியினும் அருமையாகக் கருதிப் போற்றிய மனப்பான்மை இனிது விளங்குகின்றது.

*   *   *

இவ்வாறு மனத்துயர் அடைந்த மாருதி கருமேகத்தினிடையே விளங்கும் கதிரொளி போல அரக்கியர் நடுவே இலங்கிய திருமகளைக் கண்டபோது அகமகிழ்ந்து ஆடிப்பாடி ஓடிப் பாய்ந்தான்.

" ஆடினன் பாடினன் ஆண்டும்
ஈண்டுமே பாய்ந்து
ஓடினன் உலாவினன்
உவகைத் தேனுண்டான் "

என்று கம்பர் பெருமான் கூறுமாறு மாருதி மதுவுண்டவன்போல மகிழ்ந்து மனங்களித்தான். அசோகவனத்தில் சோகமே வடிவாய் அமைந்து மாசுற்ற மணிபோல மயங்கியிருந்த மங்கையை நோக்கி,

"புனைகழல் இராகவன் புயத்தையோ புகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின்
[மாண்பையோ
வனைகழல் அரசரின் வண்மை வீக்கிமே
சனகர்தம் குலத்தையோ யாதைச்சாற்று
[கேன்"

என்று மாருதி மனம்பூரித்தான். 'என் தலைவனான இராகவனது புயவலியைப் புகழ்வேனோ கற்பினுக்கு அணியாய மங்கையின் மனநலம் கண்டு மகிழ்வேனோ, இம்மங்கை பிறந்த மரபின் மாண்பைக் கூறி மகிழ்வேனோ' என்று பலவாறாக மாருதி நினைந்து மகிழ்ந்த மனப்பான்மை, அவன் இராமன்பால் வைத்திருந்த இறவாத இன்ப அன்பை இனிது விளக்குகின்றது. தவம் செய்த தவமே போல் விளங்கிய சீதையின் மாசற்ற மாண்பினை இராமன் தன் கமலக் கண்களால் காணும் பேறு பெற்றிலேனே யென்று மாருதி மனம் வருந்தினன்.

"பேண நோற்றது மனைப் பிறவி
பெண்மைபோல்
நாண நோற்றுயர்ந்தது நங்கை
தோன்றலால்
மாண நோற்று ஈண்டிவள்
இருந்தவாறெலாம்
காண நோற்றிலன் அவன்
கமலக் கண்களால்"

என்று அநுமன் கூறும் மொழிகளில் அவனது அன்பின் திறம் நன்கு விளங்குகின்றது.

*   *   *

இவ்வாறு இராமனிடமும் தேவியிடமும் அளவிறந்த அன்புபூண்ட அநுமன் தனியாய் நலிந்து வருந்திய திருமகளைக் கண்டபோது அம்மங்கையைத் தன் தோளிலேற்றித் தலைவன்பால் ஒப்புவிப்பதே முறையென்று கருதுவானாயினன். சொல்லிலும் செயலிலும் இறையளவும் முறைதவறாத மாருதி திருமகளாகிய தேவி ஓர் மாது என்பதையும் அம்மாதின் திருமேனி தன்மீது தோய்தல் அவள் கற்பினுக்கிழுக்காம் என்பதையும் கருதாது அவள்பால் வைத்த இரக்கத்தால் முறை மறந்து மங்கையைத் தன் தோள்களில் தாங்கிச் செல்வதாகக் கூறினன. தமிழ்நாட்டின் செம்மைசான்ற நாகரீகத்திற்கேற்றவாறு நூலியற்றிய கம்பர் பெருமான் இலங்கை வேந்தன் சீதையின் மேனியைத் தீண்டாது அவளிருந்த இடத்தை அகழ்ந்தெடுத்து அசோகவனத்தில் சிறையமைத்தான் என்று அழகாய் உரைத்தார். தன் நாயகனையன்றி மற்றொருவனை மனத்தாலும் மெய்யாலும் தீண்டுதல் மாதரது கற்பு நிலைக்கு மாசாகும் என்பதை, மதிநலம் வாய்ந்த மாருதி நன்றாய் அறிந்திருந்தான். அசோக வனத்தில் அரக்கியர் நடுவே தனியாயிருந்து தன்விதியை நினைந்து வருந்திய சீதை,

"உன்னினர் பிறரென உணர்ந்தும்
உய்ந்து அவர்
சொன்னன சொன்னன செவியில்
தாங்கவும்
மன்னுயிர்காத்து இருங்காலம்
வைகினேன்
என்னின் வேறரக் கியர்
யாண்டையார் கொலோ"

என்று மொழிந்த மொழிகளை அநுமன் அவளறியாமல் மறைந்து நின்று தெரிந்தவனேயாவான். தன்னைப் பிறனொருவன் நினைந்து காதல் கொண்டமையே தன் கற்பு நிலைக்குத் தவறென்று கருதிய திருமகள் ஆணுருவம் தாங்கிய அநுமனது தோள்களில் ஏறிச் செல்ல ஒரு சிறிதும் இசையாள் என்பதை அவன் மறந்துரைத்த மனப்பான்மை வியப்பாகவே தோன்றுகின்றது. இவ்வாறு அநுமன் முறை தவறி உரை செய்தான் என்பதை மெல்லிய மொழிகளால் சீதை அறிவுறுத்தக் கருதினள். அநுமனது மனம் மாசற்றதென்றும் அவன் ஐம்பொறிகளையும் வென்ற ஐயன் என்றும் தன்னிடம் அவன் கொண்ட அளவிறந்த ஆர்வத்தால் சிறிது முறை தவறி உரை செய்தானென்றும் அறிந்த சீதை ஐயனே,

"அரியதன்று நின் ஆற்றலுக் கேற்றதே
தெரிய எண்ணினை செய்வதும் செய்தியே
உரியதன்றென ஓர்கின்ற துண்டே அதுஎன்
பெரியபேதைமைச் சின்மதிப்
[பெண்மையால்"

என்று நயம்சான்ற நன்மொழிகளால் மாருதி கூறிய மாற்றம் தவறென்று மொழிந்தாள். ஐயனே நீ என்னை எடுத்துச் செல்வதாக இயம்பிய செயல் அரியதன்று உனது ஆற்றலுக்கு ஏற்றதேயாகும். ஆயினும் பெரும் பேதைமை வாய்ந்த என் பெண்மைத் தன்மையால் அச்செய்கை தகாதென்று என் மனம் சிந்திக்கின்றது என்று மெல்லிய மொழிகளால் சீதை கூறும் பொருள் சேர்ந்த இன்னுரை போற்றுதற்குரியதாகும். பின்னும் சிறிது தெளிவாகத் தன் மன நிலையை மாருதிக்கு உரைக்கக் கருதிய சீதை,

"வேறும் உண்டுரைகேள் அதுமெய்ம்மை
ஏறுசேவகன் மேனியலால் இடை [யோய்
ஆறும் ஐம்பொறி நின்னையும் ஆணெனக்
கூறும் இவ்வுருத்தீண்டுதல் கூடுமோ

என்று அநுமன் அருந்தியாலுரைத்த செயல் பொருத்தமன்றென்பதை விளக்கிக் காட்டினள். 'மெய்ம்மைதவறாத ஐயனே, என் தலைவனான இராமன் திருமேனியேல்லால் வேறொருவன் மேனி என்னைத் தீண்டல் ஆகுமோ, ஐம்பொறிகளையும் அவித்த உன்னையும் ஆண் என்றே உலகம் கூறும். ஆதலால் நீயும் என் மேனி தீண்டுதல் ஆகாதன்றோ' என்று வினயமா யுரைத்தாள். இவ்வாறு சீதையின்பால் சிறந்த ஆர்வங்கொண்டு விளங்கிய அநுமனுக்கு அம்மங்கை தன் கற்பின் வலிமையால் உயரிய வரங்கள் அளித்தாள். தனியாயிருந்த தன்னைக்கண்டு தன் தலைவனது செம்மைசேர் நாமத்தைச் செவிகளிற் சேர்த்து உயிரளித்த மாருதியை மனமாரப் புகழ்ந்து,

பாழிய பணைத்தோள் வீர
துணியிலேன் பரிவுதீர்த்த
வாழியர் வள்ளலே யான்
மறுவிலா மனத்தேன் என்னில்
ஊழியோர் பகலா யோதும்
ஆண்டெலாம் உலக மேழும்
ஏழும் வீவுற்ற ஞான்றும்
இன்றென இருத்தி என்றாள்

என்று கவியரசர் கூறுமாறு சீதை மாருதிக்கு இறவாத பெருவாழ்வை அளித்தாள். இவ்வாறு மூவாச் சாவாவரம் பெற்ற மாருதி அவ்வரத்தின் பெருமையை இலங்கையிலேயே இனிதறிந்தான். இலங்கை வேந்தன் ஆணையால் அநுமனதுவாலில் அங்கியைக் கொளுத்தியபோது அந்நெருப்பு ஓங்கியெழுந்து அவனுருவத்தைச் சூழ்ந்து பெருஞ்சுடராய் இலங்கிற்று. இவ்வாறு அநுமனை அரக்கர் நெருப்பால் வருத்துகின்றார்கள் என்றறிந்த சீதை, அங்கித் தேவனை நோக்கி, ஐயனே, அருள்நிறைந்த இராமனது அருந்துணைவனே, நாய் போன்ற அரக்கர், அநுமனை நலியக் கண்டால் நீ உதவாயோ, இவ்வுலகிற்கு நீயே ஒப்பற்ற சான்றாய் ஒளிர்கின்றாய், நீ யறியாத பொருள் இவ்வுலகில் ஒன்றும் இல்லை. நான் மாசற்ற மனத்தேனாயின் அங்கியே நீ அநுமனைச் சுடலாகாது என்று அன்பினால் ஆணையிட்டாள்.

" தாயே யனைய கருணையான்
துணையே ஏதும் தகைவில்லா
நாயே யனைய வல்லரக்கர்
நலியக்கண்டால் நல்காயோ
நீயே உலகுக்கு ஒருசான்று
நிற்கே தெரியும் கற்பதனில்
தூயேன் எனில் தொழுகின்றேன்
எரியே அவனைச் சுடல் என்றாள்.

இவ்வாறு சீதை தொழுதபோது அநுமனது திருமேனியைச் சூழ்ந்து நின்ற நெருப்பு அவனைச் சிறிதும் சுடாது நின்றது. இப்புதுமையைக் கண்ட அநுமன் அதன் காரணத்தைத் தன் அறிவினால் கருதினன். சீதையின் மாசற்ற கற்பின் பெருமையால் கடுங்கனலும் குளிர்ந்ததென்ற களிப்புற்றான்.

" வெற்பினை லியன்ற தன்ன
மேனியை விழுங்கி வெந்தீ
நிற்பினும் சுடாது நின்ற
நீர்மையை நினைவில்நோக்கி

Best copy available

அற்பினல் அருதசிந்தை
　　அநுமனும் சனகன் பாவை
கற்பினு லியன்ற தென்பான்
　　பெரியதோர் களிப்பனுனன்',

று கம்பர் பெருமான் கூறுமாறு மங்கை வரத்தினுல் மாருதி அங்கியின் வெம் மையை அறியானுயினன்.

*　　*　　*

இன்னும் அநுமன் இராமன்பால் வைத்த அன்பினுல் அப்பெருமானது ஆவிபோன்ற தேவியை அரக்கன் கொன்ருன் என்று அறிந்தபோது ஆற்றுெணுத் துயரம் அடைந்து கலக்கம் உற்ருன். அந்நிலையில் அநுமன் நொந்து கூறும் சோகச் சொற்கள் உள் ளத்தை உருக்குகின்றன.

"அன்னமே என்னும் பெண்ணின்
　　அரும்கலக் கலமே என்னும்
என்னமே என்னும் தெய்வம்
　　இல்லையோ யாதும் என்னும்
சின்னமே செய்யக் கண்டே
　　தீவினை நெஞ்சம் ஆவி
பின்னமே யாயதில்லை
　　யென்னும் போராற்றல் பேர்ந்தான்"

"அன்னமே, பெண்ணின் அரும் கலமே, அரக்கன் உன்னை வாளால் அரியக்கண்டும், பாவியேன் ஆவியோடிருக்கின்றேனே! ஐயோ தெய்வமும் இல்லையோ? இம்மூவுல கத்தையும் மூடியிருந்த இருள் நீங்கி விடியும் காலம் வந்ததென்று எண்ணினேன். மீண்டும் துன்ப மாய இருள் வெள்ளம் படிந்ததோ, தீவினை உலகெலாம் பரந்ததோ, அந்தோ அரக்கன் திருமகளை வாளால் எறிந்தனனே? அறநெறியும் சிதைந்ததோ? பாதக அரக்கன் பத்தினித் தெய்வத்தைப் படுத்தானே, குல மகளைத் திருமகளைக் கொன்ருனே, ஐயோ,

"வஞ்சியை எங்கும் காணது
　　உயிரினை மறந்தான் என்ன
செஞ்சிலை உரவோன்தேடித்
　　திரிகின்ருன் உள்ளம் தேற
அஞ்சோலாள் இருந்தாள் கண்டேன்
　　என்றயான் அரக்கன்கொல்லத்
துஞ்சினுள் என்று சொல்லத்
　　தோன்றினேன் தோற்றம் ஈதால்

திருமகளைக் கானமும், மலையும் தேடி உயிர் பிரிந்த உடலம் போல் திரிந்த வீரன் உளம் தேற, "ஐயனே, உன் அரும்பெருந்தேவியைக் கண்டேன்" என்று கூறி அவனது மனத் துயரை மாற்றிய பாவியேன் இப்போது அவ் வீரன் முன்னே நின்று தேவி துஞ்சினுள் என்று சொல்லத் தோன்றினேனே? பாவி யேன் எடுத்த பிறவியின் பயனும் இதுவோ? ஐயோ, தெய்வமே,

"அருங்கடல் கடந்து இவ்வூரை
　　அள்ளெரி மடுத்து வெள்ளக்
கருங்கடல் கட்டிமேருக் கடந்து
　　ஒருமருந்து காட்டிக்
குரங்கினி உன்னுேடொப்பது
　　இல்லெனக் களிப்புக் கொண்டேன்
பெருங்கடல் கோட்டம் தெய்வமையாயது
　　என் அடிமைப் பெற்றி"

அருங்கடலைக் கடந்து, இலங்கைமா நகரை எரிமடுத்து கருங்கடல் மீது அணை அமைத்து மேருமலை கடந்து மருந்தெடுத்து என்னுேடொப்பாய குரங்கு உலகில் இல்லை என்று உயர்ந்தோர் சொல்லக் கேட்டு உளம் மகிழ்ந்தேன். அடியேன் செய்த செயலெல் லாம் ஆற்றில் கரைத்த சாந்துபோல் அழிந் ததோ? என்கண்ணெதிரே நின்று கற்புடைய தெய்வத்தை வாளால் எறிந்த அரக்கனைக் கொல்லக் கூசி நின்றேனே, கையிலும், கரத் திலும் வெண்சோறுண்டு வயிறுவளர்க்கும் வீரமேயன்றி வேறென் செய்யவல்லேன்?" என்று மாருதி கூறும் மொழிகள் கல் நெஞ்சை யும் கரைந்துருகச் செய்வனவாகும்.

*　　*　　*

அநுமனது அன்பின் திறத்தினை இனி தறிந்த இராமன் அவனைத் தன் ஆவியினும் உயர்வாகக் கருதிப் போற்றினுன். மேகநாத னதுபடைக்கலத்தால் மயங்கிவிழுந்தமாண்ட மாபெரும் சேனையை மாருதி மருந்தினுல் மீண்டும் உயிர்ப்பித்தபோது வீரன் அவனை மார்போடணைத்து "ஐயனே, முன்னம்முறை தவறுத அயோத்தி மன்னனது மக்களாய்ப் பிறந்தோம், மேகநாதனது படைக்கலத்தால் இறந்தோம், இப்போது உன்னருளால் மீண் டும் பிறந்தோம்" என்று மனமாரப் புகழ்ந் தான்.

"அழியுங் கால்தரும் உதவிஐயனே
மொழியுங்கால்தரும் உயிரின் முற்றுமே
பழியுங் காத்து அரும்பகையும் காத்தனை
வழியும் காத்தனை மறையும் காத்தனை"

என்று இராமவீரன் மாருதியின் நன்றியை மாண்புறப் போற்றினுன். இன்னும் மேக நாதன் சீதையைக் கொன்ருனல்லன், மாயா சீதையைக் கொன்று தம்மை மயக்கி நிகும்பலையில் வேள்வி செய்ய முயன்ருன் என்றறிந்த பெருமான் ஐயம் தீர்ந்து,

"தீர்வது பொருளே துன்பம்
　　நீயுண்டு தெய்வ முண்டு
மாருதியுண்டு நாம்செய் தவமுண்டு
　　மறையு முண்டால்"

என்று மாருதியும், மறைப்பொருளும் உள்ள அளவும் தமக்குத் தீங்குவாராதென்னும் உண்மை உரைத்தான். இன்னும் இலங்கை வேந்தன் விபீஷணனைக் குறித்து எறிந்த வேற்படையைத் தன் மார்பில் ஏற்று மயங்கி விழுந்த இளைய வள்ளலை மாருதி மருந்து கொணர்ந்து உயிர்ப்பித்தபோது இராமன் அநுமனைக் கட்டி அணைத்து,

"பெற்றனன் உன்னை
　　என்னை பெறுதன பெரியோய் ஒன்றும்
அற்றிடை ஈறு செல்லா
　　ஆயுளை ஆக என்ருன்"

இவ்வாறு அழியா வரம்பெற்று அநுமன் இன் னும் வாழ்கின்ருன் என்பதே அகக் கண் கொண்டு காணும் அறிவுடையார் கருத்தா கும். சிறியதிருவடி யென்னும் சீர்மைக்கு ஏற்ற முறையில் இராமனுக்குத் திருமுடி சூட்டும் திருநாளில் அங்கதன் உடைவாள் ஏந்தி அருகில் நிற்க, பரதன் நிதியேவடிவாய் வெண்குடை கவிக்க, இலக்குவனும்,சத்து நுக்கனும் இருமருங்கும் கவரி வீச இராமன் திருமகளோடு இனிதிருந்த அரியாசனத் தைத் தாங்கி நிற்கும் பெருமையை அநுமனே பெற்ருன்.

சுவாமி சிரத்தானந்தர் குருகுலமாணவருக்கு அருளிய மறைமொழி.

தீய எண்ணங்களும் உணர்ச்சிகளும் வளர்ந்தோங்குவதற்குரிய முதற் காரணங்கள் இரண்டு. ஒன்று பரம்பரையை ஒட்டியது; மற்றது தீயார் இணக்கத்தைக் குறித்தது. பரம்பரையாக வரும் பழக்கங்களையும் மாற்றி அமைத்தல் கூடும். தீயார் இணக் கத்தையும் ஒழித்தல் கூடுமன்ருே? நல் இணக்கத்தை வளர்ப்பதே திருவற்ற தீயார் இணக்கத்தைத் தவிர்ப்பதற்குரிய நன்மருந் தாகும். பரம்பரையாக வரும் செட்ட பழக் கங்களை யெல்லாம் கல்விப் பயிற்சியாலும் மனத்தைப் பண்படுத்துவதாலும்மாற்றுதல் கூடும். சோம்பிக் கிடக்கும் உள்ளத்தி லேயே பேயுணர்ச்சிகள் பிரந்து வளர்வது இயல்பு. எனவே கல்விப் பயிற்சியிலும் தக்க நன் முயற்சிகளிலும் பழகி வரும் உள் ளத்தையும் உடம்பையும் எத்தகைய தீய நாச எண்ணமும் அணுகி அழிக்கவல்ல தன்று.

காட்சியைக் கட்டுப்படுத்துவது.

எத்தனை வகையான பாவங்களுக்கு நமது கண்கள் காரணமாகின்றன? எத்தனை மாயா விலாச மோக வலைகளில் கண்கள் நம்மை வீழ்த்துகின்றன? காட்சியை தூய் மைசெய்து கொள்ளுமாறு உறுதி கொள் ளல் வேண்டும். மாணுக்கர்களும் இளைஞர் களும் பிரமசரிய விரதம் பூண்டு உள்ளத் தைப் பண்படுத்தல் வேண்டும். அப்பொ ழுது சிறுமிகள் தொடக்கமாகக் கிழவிகள் ஈருக உள்ள பெண்மணிகளை யெல்லாம் தாய்மார்களாகவும், சகோதரிகளாகவும் கருதுவது நன்று. கண்ணுல் செய்யும் பாவங்களைத் தவிர்ப்பதுதான் முதற்கண் மாணவர் செய்துகொள்ளத் தக்க பயிற்சி யாகும். நமது இளைஞர்கள் நகையிழந்த முகத்தோடும் சோகம் தோய்ந்த தோற்றத் தோடும் காணப்பட வேண்டுமென்பது என் கருத்தன்று. இன்பமும் விடுதலைக்காத லும் நாம் செல்லுமிட மெல்லாம் நம்மைத் தொடர்ந்துசெல்லுதல்வேண்டும்; நம்மைச் சூழ்ந்து சார்தல் வேண்டும். பேரருளாளரும், பேரறிவாளரும், பேரன் பருமான பெரியோர்களெல்லாம் எப்பொ ழுதும் முகமலர்ச்சியோடு இளநகை அரும்பு வது கண்கூடன்ருே? எனினும் அன்னுர், "இறைவனே! எங்கள் கண்கள் யாண்டும் நல்ல பொருள்களையே நாடுதல் வேண்டும்" என்ற வேதமந்திரத்தைத் தங்கள் வாழ்க் கையிலும் குணுதிசயத்திலும் மொழி பெயர்த்துக் காட்டுவர். அவ்வண்ணமே நாமும் செய்தல் வேண்டும்.

தோட்டு உணர்வது.

ஒருவனையொருவன் கெட்ட எண்ணத் தோடு தொடுவது தகாது. பண்டைநாளில் மல்லர்கள் ஒருவரோ டொருவர் போர் புரி கையில், யார் எதிரே நிற்கிருர் என்பதை அறவே மறந்துவிட வேண்டுமென்று கூறு வது வழக்கம். இளகியஉள்ளத்தோடு எதிரி யைத் தொடுவது மற்போர்புரியும் சந்தர்ப் பத்தில் இழுக்காகு மென்பது அன்னுர் கொள்கை. கெட்ட எண்ணத்தோடும், தமோ குணத்தோடும் பிறர்மீது சாய்ந்து கொள்வது தகாது. இழிவான துர்ப்பலத் தால் இவ்வாறு செய்வதும் தவிர்க்கத் தக் கதே. சிறுவர் உலகில் இவ்வழக்கம் பெரி தும் காணப்படுகின்றது. இளைஞர் ஒருவ ரோடொருவர் கைச்சரசம் செய்து விளை யாடுவது கண்டிக்கத் தக்கது. இங்ஙனம் தீண்டாமை யென்பது தீவினை விஷயத்தில் மாத்திரம் அதி ஜாக்கிரதையாக அனுஷ் டிக்கப்படுதல் வேண்டும்.

சமய உணர்வு,

சமயஉணர்வினை இழந்து பேசுவாரோடு மாணுக்கர் தோழமை பூண்டு கொள்ளாத படி ஆண்டவன் அவர்களைக் காத்தருள் வானுக! கடவுளுக்கு இகயமும் கடமைக் குக் கையுமாக வாழும் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையினைப் பரிகசிப்போரது உறவு இளைஞர்களுக்கும் மாணுக்கர்களுக்கும் அபாயகரமாக முடிவதாகும். இளைஞர்கள் தனிமையாக உலாவும்போதும்இரகசியமாக உரையாடும் பொழுதும் சிற்றின்ப உரை களை மட்டுப்படாது வழங்குகின்றனர். இவை நல்லொழுக்க நாசத்திற்கு ஏதுவா கும். இளைஞர்களது பேச்சும் பொழுது போக்கும் அவர்களது வாழ்க்கையினை உரு வாக்கி மலராச் செய்கின்றன என்பது கவ னிக்கத் தக்கது.

இக்கலாசாலையானது குரோதன வருடம் ஆனிமீ உடுஉ துவங்கப்பட்டது. அவ் வாறு துவங்கிச் சில மாதங்கள்வரை தன வைசியர் சங்கத்தாரது போஷரவில் ஓராசி ரியருடன் செவ்வனே நடைபெற்று ஓங்கி வரலாயிற்று. பின்னர் மேலே கூறிய பிரபு சிகாமணியும் இரக்கசிற் பெருமை வாய்ந்த வரும் ;வள்ளன்மையுடையவரும் கீர்த்தி மிக்க பிரபல வர்த்தகருமாகிய சா. லெ. ராம. செ. செட்டியார் அவர்கள் அதன் தளர்நிலையை அறிந்து உவகை அன்புடன் ஏற்று நடத்தி வருகின்ருர்கள். இதனை முத லிற் குறித்த நன் முகூர்த்தத்தில் திறந்து வைத்ததும் அவர்கள் அருமைக்கரமே என்பதும் இங்கு நினைவு கூரற்பாலது. இவ் வாறு நடைபெற்று வந்த சில மாதங்களுள் பிள்ளைகளது அதிகரிப்பை அறிந்து பின்னு மொரு ஆசிரியரைத் தந்தார்கள். அடுத்து வரும் விபவ ஆனியுடன் மூன்றுண்டுகள் நிறைவுபெறுகின்றன. இதுகாலை மூன்ரு வது ஆசிரியரும் ஒருவருடன், பிள்ளைகள் ஆணும் பெண்ணுமாக நூற்றுக்கு மேற்பட மிக்க சிறப்புடன் நடந்துவருகின்றது.

இந்நாடுகளில் பெரும்பாலான தோட்டங் களில் கூலிகளுடைய பிள்ளைகளுக்காக அரசினரால் அமைக்கப்பட்ட வித்தியாசாலை களுண்டு. சிற்சிலவிடங்களில் நகரங்களிலும் அரசினரால் நடத்தப்பெறும் தமிழ் வித் தியாசாலைகள் அருகிக் காணப்படுகின்றன. ஆயின் ஒன்றிலாயினும் சைவசமயப் பிள்ளை களுக்கேற்ற சமயக் கல்வி சமய ஒழுக்கம் போதிக்கப்படுவதில்லை. ஆங்கிலக் கல்வியில் வாஞ்சை அதிகரித்து அல்லும் பகலும் அச் சிந்தனையில் மனம் ஆழ்ந்து செல்லுங்கருத் தாலும் இந்நாட்டுப் பழக்க வழக்கத்தாலும் பொதுவாய்த் தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தாய் மொழியைத் தட்டின்றிப் பேச முடிவ தில்லை. சிறப்பாகச் சைவப் பிள்ளைகளுக் குச் சமயத்தின் பெயர், சமயச் சின்னம் சமயக்கடவுள் பெயர் இவையிவையெனச் சொல்லத் தெரியாது. முக்கியமாய் சமய சின்னமாகிய திருநீறணியும் பழக்கமும் மிகக் குறைவெனின் ஏனையவற்றைப் பேச வும் வேண்டுமோ? இந்நிலைக்காலவமையத்து இத்திருவள்ளுவர் கலாசாலையானது தோன் றிச் சைவப் பிள்ளைகளுக்குத் தங்கள் சம யத்தின் பெயர் இன்னது சமயக் கடவுள் பெயர் இன்னது சைவசமயிகள் ஆவசியகம் தரிக்கவேண்டிய சமய சின்னம் இன்னது சமய ஒழுக்கங்கள் இவையிவை; ஆலய சேவை அத்தியாவசியகம் என்பனவாதிய சமய அறிவுகள் பெறுதற்கும் தாய்மொழி யைத் தட்டுமுட்டின்றிப் பேசவும் பெருந் துணை செய்ததற்கு மகோபகாரியாயிருக் கும் திருவாளர் செட்டியாரவர்களது மகௌதாரிய குணமும் பொருளும் ஆயுளும்

"தாழ்நீர் வெண்டலைப் புணரியலைக்குஞ்
　　　　[செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர்வியன் துறைக்
கடுவளி தொகுப்ப ஈண்டிய
வடுவாழ் எக்கர் மணலினும் பல"

கால மொழுவதாக.

இனி இக்கலாசாலையில் சமயபேதம் சாதி பேதமின்றி யாவரும் ஒருசேரப் பயிற்றப் படுகின்ருர்கள். சமயபாடம்பிறமதத்தவருக் குக் கட்டாயமின்று. இதுவரை இக்கலா சாலையில் பிழையின்றி எழுத வாசிக்க மாத் திரம் கற்றுக்கொண்டநிலையில் பக்குவ சாலிகளாகுந்தருணம் வீட்டில் நின்றுவிட்ட

ஈப்போ

திருமிகு சா. லெ. ராம. செ. செட்டியப்ப செட்டியாரவர்கள்

திருவள்ளுவர் கலாசாலை.

சிறுமியர் சிலர்; மேற்கூறிய அறிவளவில் கற்றுக்கொண்டு சீவனத்தை முன்னிட்டுப் பல தொழிலுக்கும் போன சிறுவர்கள் சிலர். ஆனுல் இந்தவிடத்தில் ஒரு விஷயம் சொல்லாமல்போக முடியவில்லை. அதா வது உத்தியோக முயற்சியுடையோர்களது பிள்ளைகள் முதலில் வரும்போது அவர்க ளது வயது மூன்றுக்கும் ஐந்துக்கும் இடைப்பட்டதாக விருக்கும். இந்நிலையி லுள்ள பிள்ளைகளை ஆறு வயதுக்குள் எதையும் வாசிக்க எழுதக் கற்பித்து முடிக்கவேண்டும். ஏனெனில் அதற்குமேற் பட்ட வயதை லாபமற்ற தமிழ்ப் பாஷை யில் செலவிடக்கூடாதென்பது ஒன்று; ஏழு வயது முடிந்தால் ஆங்கிலப் பள்ளிக்கூடத் தில் சேர்க்கமுடியாதென்பது மற்றொன்று. இதனுல் தற்காலம் ஆங்கிலக் கல்வியின் உத்தண்டவேகத்தால் தமிழ்மொழி ஒதுங்கி நிற்க வேண்டியதாயிற்று. இவ்வாருன பிள்ளைகளைப் பயிற்றுவதாலுண்டாகும் சிரமத்தைத்தெரிதலே அறிஞர்பால் விடுகின் ருேம். இனி இக்கலாசாலையில் கற்கும் ஆண் பிள்ளைகளாயினுஞ்சரி பெண் பிள்ளைகளா யினுஞ்சரி மாதம் முழுவதும் கிரமமாக வந்தவர்கள் கிடையாது. அதற்கு அவர்கள் கூறுங்காரணம் பெரும்பாலும் எளிதும் போலியும் பொருத்தமற்றதுமாகவே இருக் கும். அது விஷயத்தில் பெற்ருேர்கள் பெரிதும் கவனமற்றவர்களாய் இருக்கிருர் கள். இதைப்பற்றிச் சில பெற்ருருக்குக் கவனப்படுத்தியும் பாராமுகம் செய்கின்றனர். ஆங்கிலப்பள்ளிக்கூடமாயின் இன்றியமை யாத கருமமாயினும் தவருது சென்று வருகின்ருர்கள். அது சீவியவித்தையாயி ருப்பது போல் தமிழனுக்குத் தமிழ் சீவவித் தையாயிருக்கின்றதென்பதைப் பெற்ருேர் கள் நன்குணர்வார்களாக. மேலும் வாரத் தில் ஒரு நாளைக்குத் தேவாரம் திருவாச கம் திருவாய்மொழி பாரதிபாடல் அரிய நீதிமொழிச் செய்யுட்கள் இவைகளை மனப்பாடம் செய்யும்படி வகுப்புக்கேற்ற வாறு கொடுத்துப் பண்ணிசையுடன் சொல்லும்படி பழக்கிவருகின்ருேம். அவ் வாறு பழகிப் பாடம்பண்ணியதை அந் நாளில் எல்லாப் பிள்ளைகளையும் ஒரே இடத்திலிருத்தித் தனித்தனி யொவ்வொரு பிள்ளைகளாக எழுந்து பிரசங்கஞ் செய்யும் மாதிரியாகப் பாடம்பண்ணியதைச் சொல் லும்படி ஒழுங்குசெய்து நடத்திவருகின் ருேம். இதனுல் செய்யுள் சொல்லுந்திறமை உண்டாவதோடு சபைக் கூச்சம் கோழைத் தனம் முதலியன நீங்கிப் பிற்காலத்தே அது அவர்களுக்குப் பெருந்துணை செய்யும் என்பதை அறிவாளிகள் நன்குணர்வர். இவ்வாறும் [illegible] இம்முறையை யனுசரிப்பது சாலசிறந்த தாகுமெனத் தெரிவிக்கின்ருேம். இனி இம் முறையான பாடமுள்ள அந்நாளில் பல பிள்ளைகள் வராது நின்றுவிடுகின்ருர்கள். பயமுறுத்தி நெருக்கிப் பழக்குவோ மெனின் அடியோடு வித்தியாசாலையை விட்டு நீங்கிவிடுவார்கள்போலும் தெரிகி றது. ஒரு பிள்ளையின் பிதா தனது பிள்ளை க்குப் பாட்டுச் சொல்லிக்கொடுக்க வேண் டாம் என்று நேரே கடிதமும் எழுதினர். இவ்வாருன தமிழ்மொழியபிமானம் குன்றி யுள்ள இந்நாட்டில் இக்கலாசாலையானது தமிழ்த் தொண்டாற்றிக்கொண்டு சோடச கலையுடன் விளங்குகின்றது. இனிமேலா வது தமிழ்ப்பற்று மிக்கோராய் பிள்ளைகள் மேலே கூறியவற்றில் அமைந்தவரச் செய் வது பெற்ருேர் கடனும். மேலும் இக்கலா சாலையில் இலக்கிய விலக்கண வகுப்புக்களு முண்டு; உண்டாயினும் அவைகளைக் கற் கும் வகுப்பினர் அரிதினும் அரிதாயினர். ஆயினும் சில தமிழ்ப்பற்று மிக்க பிள்ளை கள் கேம்பிரிஜ் சோதனைக்குத் தமிழ்ப் பாடம் எடுத்துக்கொண்டு தனிமையாகக் கற்றுச் சித்தியடைந்தனர். இது போழ்து அவ்வாறு கற்று வருபவருமுண்டு. அவை யெல்லாம் இக்கலாசாலை தோன்றிய பின் கிடைத்த நன்மையாகும். இம்மலாய் நாட் டில் வசிக்கும் கனதனவான்களாகிய தமி ழன்பர்கள் இந்நாட்டிலுள்ள ஆங்கிலக் கலாசாலைகளில் தமிழ்ப் பிள்ளைகளுக்குக் கட்டாய பாடமாகத் தமிழ்ப் பாஷையை வைத்தல் வேண்டும் என அரசினரிடம் விண்ணப்பித்துத் தக்க முயற்சி செய்தால் கல்வியபிவிருத்தியில் ஊக்கமுள்ள கருணை தங்கிய அரசினர் அவ்வாறு செய்யாது விடார். இது அவசியம் இந்நாட்டில் தமிழ் மக்கள் கவனிக்கவேண்டிய முக்கிய காரிய மாகும். ஏனெனில் எனதனுபவத்தில் இந் நாட்டில் ஆங்கிலங்கற்கும் தமிழ்ப் பிள்ளை கள் சாதாரணமான சொற்களைத்தானும் தாய் மொழியிற் பேசவியலாது தயங்கி நிற் பதைக் காண்கின்றேன்.

ஒரு தேசத்தில் ஒற்றுமை உண்டாவ தற்கு அத்தேச பாஷை இன்றியமையாத துணைக்காரணம். தேசப்பற்றிற்கு அடிப் படை தாய்மொழிப்பற்றே. எச்சாதியாராயி னும் எம் மதத்தாராயினும் பாஷையே ஒற்றுமையை நிலைநாட்டத்தக்கது. அது இல்லாவிடின் தேசமுமில்லை, மதமுமில்லை, சமூகக் கட்டுறவுமில்லை. "பாஷை என்பது உடலின்மேல் அணியப்படும் ஆடைபோன்ற தன்று, அது உடலின் சிறந்த பகுதியாகிய தோல் போன்றளது. அதை விருப்பம் போற் கடன்வாங்கி அனுபவிக்க முடியாது. அதை நினைத்தபோது கழற்றிஎறிந்துவிட வும் முடியாது. நாகரிகமும் அறிவு வளர்ச்சி யும் பாஷையை ஆதாரமாகக்கொண்டுள்ள" தென ஓர் அறிஞர் கூறுகின்ருர். ஆதலால் முக்கியமாய் எங்கள் தாய் நாட்டில் எக் காலத்தும் தமிழ் மொழியானது குன்று விளக்காகவிருப்பதற்குப் பல காரணங்க ளிருப்பதுபோல் வேற்றுமொழித் தேசமா கிய இந்நாட்டில் 'இல்லாததால் பிள்ளை களைத் தமிழ்ச்சாதியாராகிய நம்மவர்கள் தங் கள் பிள்ளைகளுக்குத் தாய்மொழிப் பற்று வரவும் அதிற் பயிலவும் தக்க கவனஞ் செலுத்தாது விட்டாராயின் முதற் கண் மொழிமாசடைவது ஒருபுறமிருக்க மதமும் தேசமும் நிலகுலைப்பன நிலையையடைவது நிச்சயம். இவ்விதமான தாய்மொழியாகிய தமிழ், தேய்நிலை பெற்றுவரும் இந்நாட் டில் பல பிரபுக்களுண்டு. பொருளொடு கூடிய தமிழன்பர் பலருண்டு. எவர் தாய் மொழித் தொண்டாற்றிய அறஞ்செய்ய முன்வந்தார்? ஒரு தேசத்துக்குச் செய்யும் தொண்டில் மொழித் தொண்டே [illegible] மையுடைத்து, [illegible] தருமங்களிற்றும் வித்தியாசாலைத் தருமமே மிக மேலானது. இதுபற்றியே தேசத் தொண்டரும் வீர கவிச் செல்வருமாகிய பாரதியாரவர்கள்,

இன்னருங்கனிச் சோலைகள்செய்தல்
　　இனிய நீர்த்தண் சுனைகளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
　　ஆலயம் பதினுயிர நாட்டல்
[illegible]
　　பெயர்விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன [illegible]னும் புண்ணியங் கோடி
　　[illegible] எழுத்தறிவித்தல்

என அருளி[illegible], இத்தகைய தருமத் தைச் செய்ய [illegible] ளுடைய பணமே புண்ணியப் பணமாகும், தருமமே கண்ணுயினரான தனவணிகருட் டோன்றிய அன்னுருக்கு இவ்வித குணம் இயல்பே. மேலும் ஆங்காங்கு தமிழ் வளர்ச் சிக்குரிய வித்தியாசாலைகளை உண்டாக்கித் தமிழின் சீர்மை குன்றுவாது போற் வளர்த்து ஏற்றமடையச் செய்தல் வேண் டும். ஆங்கிலம் கற்று ஒய்வு நேரங்களில் பிள்ளைகளைத்தமிழ் மொழியிலும் சிறிதுபய ற்சிபெறுவிக்கவேண்டும்.இந்நாட்டு ஆங்கில கலாசாலைகளில் இந்திய மக்களுக்கு அத்தி யாவசியகம் வேண்டற்பாலனவாகிய அவர் கள் பிறந்த தேசமாகிய இந்து தேசச் சரித் திரம், பூகோளம் முதலியன கற்பிக்கப்படுவ தில்லை. ஐயாயிரம் ஆறாயிரம் மைலுக்கப் பாலுள்ள அன்னிய பூமிகளே கற்பிக்கப் படுகின்றன. ஒருவனுக்குத் தனது நாட் டைப் பற்றிய பெருமை சிறுமைகள் தெரிந்திராவிடின் தேசப்பற்றே அடியோ டொழிந்து விடுமன்ருே? தன்னாட்டிலுள்ள ஊர்கள், யாறுகள், முக்கிய இடங்கள், விசேடங்கள், சிறப்புக்களை ஒவ்வொரு வனும் அறிந்திருத்தல் அவசியமான காரி யம். மேலும் இந்நாடுகளிற் பலவிடங்களி லும் தமிழ்ச்சாதியாருடைய சங்கங்கள் இருக்கின்றன. கன்னூக்கத்துடன் மதிப் பிடத்தக்க காரியங்களையுஞ் செய்கின்ருர் கள். ஆனுல் தனது தாய் பசிகிடக்க அன்ன தானம் செய்தலே யொப்பதாயிருக்கின்றது. ஒன்றிலாயினும் ஏராளமாக ஆங்கில நூலி ருக்குமேயன்றித் தமிழ் நூல் காணக்கிடை யாது. சங்கத்து நிகழ்ச்சிகளெல்லாம் சீட் டாட்டமும், எறிபந்து, உதைபந்து, தட்டுப் பந்து, மேசைப்பந்து முதலியவற்றிலும் காலக் கழிவு போகுமேயன்றித் தாய்மொழி வளர்ச்சிக்கேனும் பயிற்சிக்கேனும் ஏற்ற முயற்சி எதுவும் நடைபெறமாட்டாது. தமிழ்ப்பாஷை மணமேயங்கு வீசமாட் டாது. ஆதலால் அவ்வாறிருப்பதைத் தவிர்த்து நல்ல தமிழ்நூல்களை வாங்கிவைத் துத் தாய்மொழி வளர்ச்சியை நாடி ஒவ் வொரு தமிழனும் உழைக்கவும், பயின்று செந்தமிழறிஞனுய் வாவும் முன் வருதல் வேண்டும். ஒரு விஷயத்தை அயல் மொழி யின் [illegible] நாட்டிலும் சொந்த மொழியின் வழியாக அறிவதே இலகுவாகவிருக்கும்; இன்பமாக விருக்கும். இதனைத் தமிழன்பர்கள் சிந்தித்துணர்வா ராக. பொருட் கல்வியை மாத்திரம் பெரு க்கி வளர்த்துப் பொருளீட்டி எண்ணிய வற்றை அனுவிப்போமென விரும்பின், தப்பிப்போவன பலவாகும்.

தெண்கடல் வளாகம் பொதுமையின்றி
வெண்குடை நிழற்றிய வொருமையோர்க்கு
நடுநாள் யாமத்தும் பகலுந்துஞ்சான்
கடுமாப்பார்க்குங் கல்லா வொருவற்கு
உண்பதுநாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லாமோ ரொக்குமே
செல்வத்துப்பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே.

எனப் புறநானூறு கட்டளையிடுகின்றது. இதையுன்னி 'ஒன்றினை யொன்றின வல் லே செயிற் செய்க' என்றபடி மேலான தருமமாகிய இவ்வித்தியாசாலைத் தருமத் தைச்செய்த [illegible] புண்ணிய சீலராகிய செட்டியாரவர்களைப் போல் இயல்புடை யோர் வித்தியாசாலைத் தருமமாகிய புண்ணி யத்தை மேற்கொண்டு செய்வதால் அறிவு, தேசம், சமூகம், நாகரிகம், சமயம் ஆகிய எல்லாவற்றையும் ஒருங்கே செய்த பெரும் புண்ணியப் பேற்றையடைந்து இம்மையில் அழியாத புகழுடம்பைப் பெற்று மறுமையி [illegible] பேரு[illegible] [illegible].

திருவள்ளுவர் கலாசாலைத்
தலைமை யாசிரியர்
கெ. வை. செல்லையா.

'தமிழ் நேசன்' பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது :—

ரப்பர் மார்க்கட்டின் நிலைமையானது இப்பொழுது என்ன கதியிலிருக்கிறது என்று சொல்ல முடியாதபடி தத்தளித்துக் கொண்டிருக்கிறது. ரப்பருக்கு இது ஒரு நெருக்கடியும் சோதனையுமான காலம். ஸ்டீவென்ஸன் ஏற்பாட்டை வைத்திருப்பதா, ஒழித்து விடுவதா என்பது கேள்வி. மலாய்நாட்டின் தலைவிதி முழுவதும் ரப்பரையே பொறுத்திருக்கிறது. ரப்பர் விலை ஏறினால் இந்நாடு வாழும், விழுந்தால் இன்னொடு தாழும் என்பது யாவருக்கும் தெரிந்தது. ரப்பர்க்கட்டுப்பாடு ஏற்பட்ட இந்த ஐந்து வருஷங்களிலும் ரப்பர் விலை எப்பொழுதும் பொய்க்காலிலேயே நின்று வந்திருக்கிறதே தவிர ரப்பர் மார்க்கட் தனது சுய சக்தியில் யதேச்சையாய் இருந்ததில்லை. எத்தனை நாள்தான் இப்பொழுது ஒரு மார்க்கட்டிற்கு சப்பைக் கட்டுக்கட்டி ஒருவர் தூக்கி நிறுத்திக்கொண்டே இருக்க முடியும்? அரசாங்கக் கைப்பிள்ளையாக இந்த கோஞ்சல் ரப்பர் மார்க்கட் இதுவரையில் இருந்துவந்ததில் இடையேயுள்ள தாகர்களும் வியாபாரிகளும் விலையை ஏற்றி இறக்கிவிட்டு சூதாடுகிறவர்களும் காசடித்தார்களே தவிர சொந்தக் காரர்களுக்கோ அல்லது விளைவிப்போருக்கோ பூரண நன்மை ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது. திருட்டு ரப்பர் விற்போர் அடித்த கொள்ளைக்கும் கணக்கில்லை. டச்சுக்காரர் அடித்த லாபத்திற்கும் கணக்கில்லை. பிரிட்டிஷ் ஆளுகைக்குள்ளான ரப்பர் விளையும் நாடுகளில் தோட்டச் சொந்தக்காரர்கள் பெற்ற நயம் பெரிதல்ல. ஆனால் கட்டுப்பாடு செய்த ஆரம்பத்தில் அது அனேகமாகப் பெரும் பாலாராலும் விரும்பப் பட்டது. ஆனால் இப்பொழுதோ அதன் ரசம் தவறிவிட்டது.

ரப்பர் நிலைமை.

அரசாங்கத்தார் லண்டனில் ஆராய்ச்சி செய்யும் ஸிவில் ரிசர்ச்கமிட்டி ஒன்றை நியமித்து ரப்பர்நிலைமையை விசாரித்தறிந்து கூடிய விரைவில் தங்களது சிபார்சை தெரியப்படுத்தச் சொல்லியிருக்கிறார்கள் என்பது நேயர்களுக்குத்தெரியும். அக்கமிட்டியின் முன்பு சாக்ஷி கொடுக்க மலாய்நாட்டிலிருந்து சாட்க்ஷிகள் லண்டனுக்குப் போய் பிறகு தீர்மானம் செய்வதென்றால் காலஹரணமாகிவிடும் என்பதை உத்தேசித்து இங்கிருந்தும் இலங்கையிலிருந்தும் பல தனிப்பட்ட நபர்களையும் ரப்பர் தொழிலில் ஈடு பட்ட கூட்டத்தார்களையும் தங்கள் முடிவான அபிப்பிராயங்களை தந்தி மூலம் தங்களுக்கு அனுப்பும்படி அரசாங்கத்தார் மூலம் அறிக்கையிட்டுக் கேட்டுக் கொண்டதற்கிணங்கி மலாய் நாட்டிலிருந்தும் இலங்கையிலிருந்தும் பல ஸ்தாபனங்களிலிருந்து அபிப்பிராயங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இலங்கைத் தோட்டக்காரர்கள் அநேகமாக ஏகோபித்துக் கட்டுப்பாட்டை எடுத்துவிட வேண்டுமென்ற அபிப்பிராயத்தையே தெரிவித்துவிட்டனர். பினாங்கு, சிங்கப்பூர், ஸிலாங்கூர் இவைகளிலுள்ள வர்த்தக சங்கங்களும் அநேகமாக ஸ்டீவென்ஸன் ஏற்பாட்டை நழுவவிட வேண்டியதுதான் என்ற அபிப்பிராயத்தையே யுடையவர்களாகத் தெரிவிக்கின்றனர். ஆனால் மலாய்நாட்டுத் தோட்டக்காரர்கள் சங்கம் மட்டும் அவசரப்பட்டு கட்டுப்பாட்டை நீக்கிவிடுவது அபாயம் என்று கட்டுப்பாட்டுச் சக்கிரம் சுழலும் மத்திய விலையை தற்போது உள்ள ௧-௩ஷில்லிங் ௬ பென்ஸிலிருந்து குறைத்து ௧-ஷில்லிங் ௬ பென்சாக வைத்தாவது கூப்பன் கொடுப்பதை ஸ்டாக்கு நிதானத்திற்குத் தக்கபடி அதிகமாக்கியோ அல்லது குறைத்தோ கொஞ்சம் தளர்த்திவிட ரப்பர் கட்டுப்பாட்டைத் தொடர்ந்தும் அனுஷ்டிக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் உள்ளதாக பல தீர்மானங்களைச் சமீபத்தில் நடந்த கூட்டத்தில் நிறைவேற்றி டச்சுக்காரர்களின் ஒத்துழைப்பையும் நாடும்படி வேண்டுகிறது. ஏஷியாடிக் தோட்டக்காரர்கள் சங்கமும் ஐ. ம. நா. வர்த்தக சங்கமும் (சேம்பர் ஆப் காமர்ஸ்) மலாய்நாட்டுத் தோட்டக்காரர்கள் சங்கமும் ஸிலாங்கூர் சீன வர்த்தகர்கள் சங்கமும் தங்களது பிரதிநிதிகளை அனுப்பி கோலாலம்பூரில் சென்ற வெள்ளிக் கிழமை மிஸ்டர் பானன் அவர்களின் தலைமையில் கூடி மேலே கண்டபடி சில தீர்மானங்களைச் செய்து சீர்மைக் கனுப்பினார்கள். ரப்பர் உற்பத்தி செய்யப்படும் சகல கீழத் தேசங்களிலிருந்து போகும் ரப்பர் முழுவதையும் கட்டுப்படுத்த டச்சுக்காரர்களும் ஒத்துழைத்தாலன்றி முடியப் போவதில்லை. அது முடியாவிட்டால் வேறு எந்த விதத்திலாவது கட்டுப்பாட்டை அறவே நீக்காது கொஞ்சகாலம் நடைபெறவேண்டுமென்றும் இன்னும் 18 மாதத்திற்கள் ரப்பர் நிலைமை ஒழுங்கு பெறுவிடில் பிறகு இதைப் புனராலோசனை செய்யவேண்டு மென்றும் மேற்படி பிரதிநிதிக் கூட்டம் கேட்கிறது. அமெரிக்கர்கள் ரப்பரை வாங்கி சேர்கட்டிவைக்கும் ஒரு குழுவினர் மூலம் ஏராளமான ரப்பரை வாங்கி மூட்டை கட்டி வைத்துக் கொண்டிருந்தனர். அக் குழுவினர் வாங்கின விலைக்கும் ஈண்டு இறங்கி விற்றதில் அதற்கும் வெகு நஷ்டம் ஏற்பட்டு விட்டது. ரப்பர் மார்க்கட்டு தாறுமாறாகக் கிடப்பதால் உலகம் முழுவதிலுமே ரப்பரில் சிரத்தை யுடையவர்கள் என்ன செய்வதென்று தோன்றாமல் மயங்குகிறார்கள். ரப்பரை யதேச்சையில் விட்டுவிடுவதா அல்லது ஏதாவது ஒருமுறையில் கட்டுப்பாடு செய்வதா என்றால் இனி டச்சுக்காரர்களின் பூரண ஒத்துழைப்பு மில்லாமல் ஒன்றும் செய்து கொள்ள முடியாது என்பது வெளிப்படை. ஆனால் பலரும் கட்டுப்பாட்டில் அலுத்து விட்டனர் என்றே தோன்றுகிறது. கையை எடுத்துவிடுங்கள் ரப்பர் தனது தலைவிதியை தானே நிர்ணயித்துக் கொள்ளட்டும் என்பதே பலருடைய அபிப்பிராயமாயிருக்கிறதாகத் தெரிகிறது. பார்லிமெண்டில் கேட்ட அநேக கேள்விகளுக்கு மந்திரிகள் சொன்ன பதிலிலிருந்து இந்த ஸிவில் ரிசர்ச் கமிட்டியாகிய ரப்பர் ஆராய்ச்சி கமிட்டி கூடிய சீக்கிரத்தில் இன்னம் ஒருமாதத்திற்குள் தங்களுடைய முடிவைத் தெரிவித்து விடுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. எல்லோரும் கமிட்டியின் சிபார்சுகளையே ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

அயலகம்.

கடு௦ டன் கனத்தை ஏககாலத்தில்தூக்கி வைக்கக்கூடிய கருவியொன்று லண்டன் துறைமுகத்தில் இருக்கின்றதாம்.

ஃ ஃ

உலகிலேயே மிகப் பெரிதாயும் ௬இ டன் கனமுள்ளது மான தூரதிருஷ்டிக் கண்ணாடி ஒன்று கிரீன்விச் ஆப்ஸர் வேட்டரியில் இருக்கின்றது.

ஃ ஃ

ஆப்கன் அரசி சூரியாவின் உடல் நிலை சரியில்லாததால் ஆப்கன் மன்னரது ருஷியப் பிரயாணம் ரத்துச்செய்யப் படலாம் என்று சொல்லப்படுகிறது.

ஃ ஃ

நான்கின் கலவரத்தில் அதிகம் கலந்து கொண்டதாக ககூ சிப்பாய்களும் ௬உ போக்கிரிகளும் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டனராம்.

ஃ ஃ

ஸ்வீடன் மரமறுக்கும் ஆலையின் வேலை நிறுத்தத் தொழிலாளர்களின் உதவிக்காக ஒருடன் ருஷியத் தங்கம் ஸ்வீடன்தேசம் வந்திருக்கிறதாம்.

ஃ ஃ

சில தினங்கள் முன் மெக்ஸிகோவைச் சேர்ந்த கஉ ஸ்டேட்டுகளில் சிறியதோர் பூகம்பம் ஏற்பட்டதால் இருவர் உயிர் துறந்தன ரென்றும் உ௦ பேர் காயமடைந்தன ரென்றும் சொல்லப்படுகிறது.

ஃ ஃ

இராக் பிரதேசத்திலும் மெஸபடோமியாவிலும் வசிக்கும் பாரசீக நாட்டார் இராக் பிரஜைகளாகிவிட வேண்டுமென்றும் இல்லையேல் அதிகப்படியான வரி யொன்று செலுத்த வேண்டுமென்றும் அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனராம்.

ஃ ஃ

[illegible] ரிக்கன் பாடசாலையில் துருக்கியருக்கு எதிரிடையான பிரசாரம் செய்யப்பட்டு வந்ததாக ஏற்பட்ட புகாரை முன்னிட்டு துருக்கிய அரசாங்கத்தார் அக் கலாசாலையை மூடிவிடுமாறு உத்திரவிட்டு விட்டனராம்.

ஃ ஃ

எகிப்தில் இங்கிலாந்திற்குள்ள முக்கிய உரிமைகளை இங்கிலாந்து விட்டுக் கொடுப்பதற்கில்லை யென்றும், அவற்றைச் சிறிது கூட மாற்ற முடியாதென்றும் ஸர் ஆஸ்டின் சேம்பர்லேன் ஓர் சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஃ ஃ

வைத்திய மாணவிகளை ஆஸ்பத்திரிகளில் அனுமதிப்ப தில்லை என லண்டனிலுள்ள பல ஆஸ்பத்திரிகள் முடிவு செய்ததைப் பற்றிப் பரிசீலனை செய்து அறிவிக்கும் பொருட்டு லண்டன் சர்வ கலாசாலை செனட் சபையார் ஓர்கமிட்டி நியமித்திருக்கின்றனராம்.

ஃ ஃ

ஜெர்மானியர்களிடம் அனுதாபங்காட்டி நடத்திய ஆர்ப்பாட்டங்களுக்காகத் தான் சிறிதும் மன்னிப்புக் கேட்க முடியாதென்றும், தாம் பேசிய வார்த்தைகளில் ஒன்றைக்கூட வாபீஸ் வாங்கிக்கொள்ள முடியாதென்றும் ஆஸ்திரியப் பிரதமமந்திரி இத்தாலிய ஸ்தானீகரிடம்கூறிவிட்டாராம்.

ஃ ஃ

ஜப்பானைச் சேர்ந்த டோகியோ, யோகோஹாமா, கியோடோ, கோபிமுதலிய நகரங்களில் ஏககாலத்தில் சோதனையிடப்பட்டு பொதுவுடைமைக் கட்சியைச்சேர்ந்த சுமார் ௪000 பேர்வரை கைது செய்யப்பட்டிருக்கின்றன ரென்றும் பல தஸ்தாவேஜிகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன வென்றும் கூறப்படுகிறது.

சுமார் லட்சம் பவுன் மதிப்புள்ள தங்கம் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து லண்டனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

ஃ ஃ

ஸ்வீடன் தேசத்தைச் சேர்ந்த கப்பலொன்று சில தினங்கள் முன் பரிபாவென்ற விடத்தில் கரைதட்டி சிலருக்கு உயிர்ச் சேத மேற்பட்டதாம்.

ஃ ஃ

இன்னும் சிலதினங்களில் தேம்ஸ் நதியில் வெள்ளமேற்படப்போகிறதென்ற பீதிகாரணமாக லண்டனில் மிகுந்த கவலை யேற்பட்டிருக்கிறதாம்.

ஃ ஃ

எகிப்திய நாட்டிலுள்ள வாப்து கட்சித் தலைவரான முஸ்தபாநஹாஸ்பாட்சா முதன் மந்திரி பதவியை யேற்று மந்திரி சபையை அமைத்திருக்கிறாராம்.

ஃ ஃ

ருஷியாவில் டொனர் கனிப்பிரதேசத்தில் புரட்சிக்குச் சதியாலோசனை செய்ததாக ௬௦ பேர் ஸோவியத் அரசினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

ஃ ஃ

உ௯௪0 லட்சம் டாலர் செலவில் தயாரிக்கப் பெற்றுள்ள அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கப்பல்படைத் திட்டம் ஜனப் பிரதிநிதி சபையாரால் அங்கீகரிக்கப் பட்டுவிட்டது.

ஃ ஃ

ஐரோப்பிய யுத்தகாலத்தில் உளவு வேலைக்காகப் பாரசீகத்திலும், துருக்கி ஜெர்மன் பிரசாரம் பரவாமல் தடுக்க இந்தியாவிலும் இங்கிலாந்து உ௦ லட்சம் பவுன் செலவு செய்திருக்கிறதாம்.

ஃ ஃ

பிரான்ஸ் ருஷியா, பல்கேரியா முதலிய [illegible] அரசாங்கத்தாரும் [illegible] வேண்டுமென பிரிட்டிஷ் ஸ்திரீகள் கிளர்ச்சிகள் செய்கின்றனராம்.

ஃ ஃ

வலுவில் சண்டை செய்வதில்லை யென்றும் மத்தியஸ்தஞ்செய்து கொள்ளுவதென்றும் கிரீஸும் ருமேனியாவும் செய்து கொண்டுள்ள உடன்படிக்கை இருதேசப் பிரதிநிதிகளாலும் கையெழுத்திடப் பட்டுவிட்டது.

ஃ ஃ

இங்கிலாந்தைச் சேர்ந்த பார்னட்டில் தீப்பந்து போன்றதோர் பெரிய நட்சத்திரம் ஒன்று சில தினங்கள் முன் ஓர் வீட்டுத் தோட்டத்தில் விழுந்து அவ்வதிர்ச்சியால் பக்கத்து வீடுகளிலுள்ள ஜன்னல்களும் வேலிகள் முதலியனவும் நொறுங்கிப் போயின வென்று ஓர் செய்தி கூறுகிறது.

ஃ ஃ

இந்திய விஷயங்களைப் பற்றிப் பரிசீலனை செய்யும் கூட்டுக் கமிட்டிக்கு மிடில்டன் பிரபு, செம்ஸ்பர்டு பிரபு, ஹாரிஸ் பிரபு, லேமிங்டன் பிரபு, ஆம்தில் பிரபு, ஐலிங்டன்பிரபு, ஹார்டிஞ்சுபிரபு, பென்ஹர்ஸ்ட் பிரபு, ஸவுத்பரோ பிரபு, கிளட் பிரபு, மெஸ்டன் பிரபு, ஒலிவியர் பிரபு முதலியவர்கள் நியமிக்கப் பெற்றிருக்கின்றனர்.

ஃ ஃ

இந்திய அரசியல் கமிஷன் சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உ௦ ஆயிரம் பவுனுக்குமேல் செலவு செய்ய எண்ணவில்லை யென்றும், பாக்கிச் செலவை இந்திய அரசாங்கத்தார் தங்களது விசேஷ அதிகாரத்தால் இந்திய வருமானத்திலிருந்து செலவழிப்பார்களென்றும் இங்கிலாந்து காமன்ஸ் மகா சபையில் ஓர் கேள்விக்கு விடையளிக்கப் பட்டது.

ஃ ஃ

அட்லாண்டிக் கடலைக்கடந்து போக்குவரத்து நடத்தும் நோக்கத்துடன் ஜெர்மனியில் ரகசியமாக ஒரு ஸீப்ளேன் விமானம் தயாரிக்கப்பட்டு வருகிறதாம். இதில் விமான உத்தியோகஸ்தர்களும் ௫௦ பேர்களும் யாத்திரை செய்யக்கூடுமென்றும், கஉ எஞ்சின்களும் கஉ பிராப்பெல்லர்களும் இருக்குமென்றும், மொத்தம் ௪000 குதிரை சக்திகொண்டதாக இருக்குமென்றும், சாப்பாட்டு அறை, படுக்கை அறை, கம்பியில்லாத் தந்தி முதலிய வசதிகள் செய்யப்படுமென்றும், பர்லினிலிருந்து நியூயார்க் சென்று வருமென்றும் ஓர் பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

தாயகம்.

ஸர் ஹார்கோர்ட் பட்லரது உருவப்படநிதிக்கு இதுவரை பர்மாவில்ரூ. ௧௨௨,௪௪௪ வசூலாயிருக்கிறதாம்.

ஃ ஃ

டில்லியில் பிளேக் நோய் தோன்றியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுவரை நகரத்தில் ௫ பேர்களுக்குக் கண்டிருக்கிறதாம்.

ஃ ஃ

'ஜமீந்தார்' பத்திரிகையின் ஆசிரியரான மௌலானா ஜாபர் அலிகான் இ. பி. கோ. ௧௪௭-வது பிரிவுப்படி கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

ஃ ஃ

காசியில் நடைபெற்ற சந்யாசிகளின் கூட்டமொன்றில் சன்னியாசிகள் அனைவரும் சுதேசி ஆடைகளையே அணிய வேண்டுமென்று ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஃ ஃ

ராவல்பிண்டி நகரபரிபாலன சபையார் செயற்கை நெய்மீது மணங்கிற்கு ரூ. ௬௦-வீதம் வரி விதிப்பதென்று நிறைவேற்றிய தீர்மானத்தைக் கமிஷனர் நிராகரித்து விட்டாராம்.

ஃ ஃ

அம்ரோட்டி எனும் அமராவதியில் சில தினங்கள் முன் பெரியதோர் மோட்டார் விபத்தேற்பட்டு இருவர் கொல்லப்பட்டதாகவும் எண்மர் காயமடைந்ததாகவும் தெரிகிறது

ஃ ஃ

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் பகல் கஉ மணி முதல் ௬ மணி வரை வண்டிகளை இழுக்க எருமைகளை உபயோகிக்கக்கூடாது என்று வங்காள அரசாங்கத்தார் தடுத்திருக்கின்றனர் [illegible]

ஃ ஃ

வியாபார நிமித்தம் இந்தியாவில் மூன்று மாதம் சுற்றுப் பிரயாணம் செய்ய வந்த டாக்டர் மர்ரே எனும் ஆங்கிலேயர் ஆரிய சமாஜப் பிரசாரகர் ஒருவரது பிரசங்கத்தைக் கேட்டு விட்டு இந்து மதத்தில் சேர்ந்து விட்டாராம்.

ஃ ஃ

கன்ஸ்டிரக்ஷன் எஞ்சினீயரிங் என்ற பிரிவில் இந்தியர்கள் ஐரோப்பியர்களுக்கோ அன்றி அமெரிக்கர்களுக்கோ எவ்வகையிலும் தாழ்ந்தவர்களல்லவென்பதை ஸ்ரீமான் லால் சந்து ஹீராச் சந்து காண்பித்து விட்டார் என்று கூறப்படுகிறது.

ஃ ஃ

சில தினங்கள் முன் பம்பாயில், தீண்டாதவர்கள் ஆயிரம் பேர்களுக்கு உபநயனம் செய்து வைக்கப்பட்ட தென்றும் பிராமணச் சிறுவர்களுக்கு உபநயனம் நடக்கையில் அனுஷ்டிக்கப் பெற்றன வென்றும் செய்தி யெட்டுகிறது.

ஃ ஃ

ஐக்கிய மாகாணத்தில் பிளேக்கும் காலராவும் அதிகமாகவிருக்கின்றன. ரோகில்கண்டு டிவிஷனில் பிளேக்கினால் பள்ளிக்கூடங்களும் கோர்ட்டுகளும் மூடப்பட்டுவிட்டன. பரில்லி பகுதியில் மரணம் அதிகமாக இருக்கிறது. மீர்ஸாப்பூர் பகுதியில் காலரா அதிகமாக இருக்கிறது.

ஃ ஃ

கல்கத்தாவைச் சேர்ந்த பஜ் பஜ் ரஸ்தாவில் சில தினங்கள் முன் ஏற்பட்ட ஓர் மோட்டார் விபத்தால் கக பேர் பலத்த காயமடைந்தன ரென்றும் நால்வர் குற்றுயிராகக் கிடக்கின்றன ரென்றும் பஸ் நொறுங்கிப் போயிற்றென்றும் செய்தி யெட்டுகிறது.

ஃ ஃ

அன்னிய நாட்டுத் துணி பகிஷ்காரம் சம்பந்தமாக சபர்மதி ஆச்ரமத்தில் ஆலை முதலாளிகளின் கூட்ட மொன்று நடந்ததாம். ஆமதாபாத் ஆலை முதலாளிகளும், பம்பாயிலிருந்து சில ஆலை முதலாளிகளும் விஜயம் செய்திருந்தனராம். இப்பொது வான விஷயத்தில் தங்களால் சாத்தியமான அளவு ஒத்துழைத்து உதவிசெய்வதாக ஆலை முதலாளிகள் காந்தியடிகளிடம் கூறியதாகவும், மூன்று மணி நேர விவாதத்திற்குப் பின்னர் இருகட்சியினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சில யோசனைகள் தயாரிக்கப் பெற்றன வென்றும் கூறப்படுகிறது.

கள்ளத்தனமாக கொக்கெயின் வியாபாரம் செய்ததாக டெல்லியில் ஒரு கணவனும் மனைவியும் கைது செய்யப்பெற்று ஜாமீனில் விடப்பட்டிருக்கின்றனர்.

ஃ ஃ

ரங்கூனைச்சேர்ந்த ஓர் கோர்ட்டிலிருந்து காவலாளர்களுடன் வேறு ஒரு இடத்திற்குக் கொண்டுபோகப்பட்ட ஒரு பெட்டியிலிருந்து ரூ. ௫000 நோட்டுகள் காணாமல் போய்விட்டதாம்.

ஃ ஃ

சிலதினங்கள்முன்கல்கத்தாவில்ஏற்பட்ட ஓர் பஸ் விபத்து காரணமாக சுமார் [illegible] குடிசைகள் எரிந்துபோயின வென்றும் ரூ. ௫000 வரை சேதமேற்பட்டிருக்கக் கூடுமென்றும் ஓர் செய்தி கூறுகிறது.

ஃ ஃ

சில தினங்கள் முன் காசி இந்து சர்வகலாசாலையைச் சேர்ந்த இருமாணவர்கள் மற்றுஞ் சிலருடன் கங்கைக்கு நீராடச் சென்று தவறி சுழலில் அகப்பட்டு மாண்டு போயினராம்.

ஃ ஃ

பம்பாயிலுள்ள [illegible] ஹாலுக்குப் பக்கத்திலுள்ள மாடி [illegible] இடிந்து விழுந்ததால் கக பேருக்குப் பலமான காயமும் உ௫ பேருக்குச் சொற்பக் காயமும் ஏற்பட்டதாம்.

ஃ ஃ

ரங்கூன் புரோம் ரயில்பாதையில் ஜாப்பிங்கானுக்கப்பால் தையக்கோனில் சில தினங்கள் முன் ரயில் ஓர் மோட்டாரோடு மோதியதால் மூவர் கொல்லப்பட்டனர். ௭-பேர்கள் பலமான காயமடைந்தனர். ௮ பேர்கள் சொற்பக் காயமடைந்தனர்.

ஃ ஃ

மைசூரைச் சேர்ந்த ஷிமோகா ஜில்லா சிகார்பூரில் ஓர் வீட்டில் ஏற்பட்ட பெரிய தீ [illegible] தால் கக பேருக்கு உயிர்ச்சேதம் [illegible] சுமார் ௮ லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் நஷ்டமாயின வென்றும் தெரிகிறது.

ஃ ஃ

சாதாரண துவிச்சக்கரவண்டிகளில்உலக யாத்திரை செய்து திரும்பிய மூன்று பார்ஸி வாலிபர்களுக்கும் பம்பாய் வாசிகள் பல பதக்கங்கள் பரிசளித்ததோடு சுமார் ௫000 ரூபா யடங்கிய பணப்பை அவர்களுக்குப் பரிசளிக்கப்பட்டது.

ஃ ஃ

மாஜி இந்தூர் மகாராஜா தேக சுகம் கருதி ஐரோப்பாவுக்குப் பிரயாணம் செய்யப் போகிறாராம். அடுத்த மாரிகாலத்தில் இந்தியாவிற்குத் திரும்ப வந்து முதலில் தன் பிரஜைகளுக்கும் பின்னர் இந்திய மகாஜனங்களுக்கும் தொண்டு செய்ய எண்ணியிருக்கிறாராம்.

ஃ ஃ

கல்கத்தாவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கள்ளத்தனமாக நோட் அடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக ஏழுபேர்களை வங்காள இரகசியப் போலீஸார் கைது செய்திருக்கின்றனர். இவர்கள் ஒருலட்சம் பெறுமதியுள்ள நூறு ரூபாய் நோட்டுகளும் ஐந்து ரூபாய் நோட்டுகளும் தயாரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஃ ஃ

கானடாவில் நடைபெற விருக்கும் ஏகாதிபத்தியப் பார்லிமெண்டரி மகாநாட்டிற்குத் திருவாளர்களான திவான் சமன்லால், பண்டித நேரு, டி. [illegible] கோஸ்வாமி, ஸர்தார் வி. விண்டுலே ஆகிய நால்வரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களது செலவைத் தாம் [illegible] கொள்ளுவதாகக் கானடா அரசாங்கத்தார் கூறியிருக்கின்றனராம்.

அடிகளின் உண்மை வாழ்வு.

பகுதி ச.

அத்தியாயம் சச.

இந்தியா வந்த பின்னர் எனது வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைப்பற்றிக் குறிப்பிடுமுன், நான் வேண்டுமென்றே கூறுது விடுத்த எனது தென்னாப்பிரிக்கா வாழ்க்கையில் நிகழ்ந்த சில சம்பவங்களைக் குறிப்பிட வேண்டுவது அவசியமெனத் தோன்றுகிறது.

நான் வக்கீல் தொழில் நடத்துகையில் நிகழ்ந்த சிலகுறிப்புக்களைப்பற்றி நான் எழுத வேண்டுமென எனது வக்கில் நண்பர்கள் சிலர் என்னைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவையனைத்தையும் குறிப்பிடுவதாயின் அவை மட்டுமே ஓர் தனிப் புத்தகமாகிவிடும். எனினும் உண்மை நெறி சம்பந்தப்பட்டமட்டிலும் அச் சம்பவங்களில் சிலவற்றையாவது குறிப்பிடாவிடின் அது முறையாகாது.

எனது தொழில் உண்மைக்கு மாறாக நான் எப்பொழுதும் நடந்ததில்லை என ஞாபகமிருக்கின்றது. அதனை நான் முன்னரே குறிப்பிட்டுள்ளேன். பொதுஜன நலனை முன்னிட்டே நான் பெரும்பாலும் வக்கீல் தொழில் நடத்தி வந்திருக்கிறேன். கைச் செலவுக்கன்றி வேறு பணம் அதற்காக நான் வாங்கியதில்லை. சிற்சில சமயங்களில் அச்செலவுங்கூட என் கைப்பணத்திலிருந்தே நடைபெற்று வந்திருக்கின்றது. இவ்விவரங்களை நான் முன்னரே கூறிவிட்டதால் எனது வக்கீல் தொழிலைப் பொறுத்தமட்டில் நான் கூற வேண்டுவன வற்றைக் கூறிவிட்டேன் எனக்கருதியிருந்தேன். எனினும் நான், அத்தொழில்பற்றி இன்னும் அதிகம் கூற வேண்டுமென எனது நண்பர்கள் விரும்புகின்றனர். உண்மைக்கு மாறாக நடக்க நேர்ந்த சிற்சில சமயங்களில் அவ்வாறு நடக்க நான் மறுத்த விவரங்களை அற்பமாக நான் குறிப்பிட்ட போதிலும் அதனால் வக்கீல் தொழில் பயன் பெறுதல் கூடுமென அவ்வன்பர்கள் கருதுவதாகத் தோன்றுகிறது.

வக்கீல் தொழில் பொய்யர்களது தொழில் என நான் மாணவனாயிருந்த பொழுது கேள்வியுற்றிருக்கிறேன். பணமாவது பதவியாவது தேடிக்கொள்ள வேண்டுமென்ற நோக்கம் எனக்கில்லாததால் நான் பொய் கூறத் துணியவில்லை.

பொய் கூறுவதில்லை என்ற எனது கொள்கை, தென்னாப்பிரிக்காவில் நான் வசித்துவந்த காலத்தில் பலதடவை கடுமையான சோதனைகளுக் குள்ளாகியிருக்கின்றது. எதிர்க்கட்சிகளில் ஆஜராகும் வக்கில்கள் தங்களது கட்சிக்காரர்களிடம், நீதிமன்றத்தில் யாது கூறவேண்டுமென்பதைப் போதித்திருப்பதை நான் அடிக்கடி கேள்விப்படுவதுண்டு. நான் எனது கட்சிக்காரர்களையோ அல்லது அவர்களது சாட்சிகளையோ பொய் கூறுமாறு ஆதரித்திருப்பேனாயின் என் கட்சிக்கு வெற்றி கிடைத்திருக்கும். எனினும் அவ்வாறு செய்யாமலே இருந்து வந்திருக்கிறேன். ஓர் வழக்கில் வெற்றி பெற்றபின்னர் ஓரே ஒரு தடவை மட்டும் எனது கட்சிக்காரர் என்னை ஏமாற்றியிருப்பதாக நான் சந்தேகித்தேன். எனது கட்சிக்காரர்களது வழக்குகளில் எவை உண்மையோ அவற்றில் மட்டுமே எனக்கு வெற்றி கிடைக்க வேண்டுமென நான் எனது உள்ளத்தில் எப்பொழுதும் எண்ணி வந்திருக்கிறேன். எனது கட்சிக்காரர்களுக்கு வெற்றி கிடைப்பினும் அல்லது அதற்கு மாறாக நிகழினும் அவர்களிடமிருந்து எனக்குக் கிடைக்க வேண்டிய ஊதியத்தைக் காட்டிலும் அதிகமாகவோ அன்றிக் குறைவாகவோ நான் எதிர்பார்த்ததில்லை.

பொய் வழக்குகளை நான் எடுத்துக் கொள்ளுவேனென்றுவது சாட்சிகள் எவ்வாறு சாட்சியம் கொடுக்க வேண்டுமென அவர்களுக்கு போதிப்பேனென்றுவது எதிர் பார்க்கக் கூடாதென என்னிடம் புதிதாக வரும்கட்சிக்காரர்களுக்குத்துவக்கத்திலேயே எச்சரிப்பதுண்டு. இதன் பயனாக பொய் வழக்குகள் எதுவும் என்னிடம் [illegible]த ஓர் கௌரவத்தை நான் ஏற்படுத்திக் [illegible]ண்டேன். எனது கட்சிக்காரர்களில் [illegible] சிலர் உண்மையான வழக்குகளை மட்டிலும் என்னிடம் கொண்டுவந்து, சந்தேகமாகவுள்ள வழக்குகளை வேறு வக்கீல்களிடம் கொண்டுபோய் விடுவார்கள்.

ஓர் வழக்கு எனக்குக் கடுமையான சோதனையாக விருந்தது. எனது கட்சிக்காரர்களுள் உத்தமமான ஒருவரால் அவ்வழக்குக் கொண்டு வரப்பட்டதாகும். அது மிகுந்த சிக்கலான கணக்கு வழக்குகள் சம்பந்தப்பட்டதோர் வழக்காகும். நெடுங்காலமாக நடந்துவந்ததோர் வழக்காகும். பல நீதிமன்றங்களில் சிறிது சிறிது அவ்வழக்குப் பற்றி விசாரணை நடந்திருக்கிறது. இறுதியாக கணக்குகள் சம்பந்தப்பட்ட பகுதி மட்டும் தேர்ச்சிபெற்ற சில கணக்குப் பரிசோதகர்களிடம் கோர்ட்டாரால் பஞ்சாயத்திற்கு விடப்பட்டிருந்த அவர்களது தீர்ப்பு எனது கட்சிக்காரர்கட்குச் சாதகமாயிருந்தது. எனினும் பஞ்சாயத்தார்கள் தங்களுக்குத் தெரியாமலே கணக்குப் பார்த்ததில் ஓர் தவறு இழைத்துவிட்டார்கள். அத்தவறு எவ்வளவு அற்பமானதாயிருந்த போதிலும், பற்றுக்கலத்தில் இருக்க வேண்டிய தொகை வரவுக்கலத்தில் இருந்தது பெரியதோர் குற்றமேயாகும். எதிர்க் கட்சியார்கள் வேறு அம்சங்களில் பஞ்சாயத்தார்களின் தீர்ப்பை எதிர்த்தார்கள். எனது கட்சிக்காரருக்கு நான் உதவி வக்கிலாக மட்டுமே இருந்து வந்தேன். பிரதம வக்கீலுக்கு இவ்விவரம் தெரிந்ததும், அதனை எங்களது கட்சிக்காரர் ஏற்றுக்கொள்ளக் கட்டுப்பட்டவரல்லவென்று அபிப்பிராயப் பட்டார். தனது கட்சிக்காரர்களது நலத்திற்குமாறாகவுள்ள எத்தவறையும் எவ்வக்கீலும் ஏற்றுக்கொள்ள வேண்டுவதில்லை யென்பது அவரது தெளிவான அபிப்பிராயம். அத்தவறைக் கூறிவிட வேண்டுமென்று நான் அறிவித்தேன்.

ஆனால் பிரதம வக்கீல், "அவ்வாறு செய்வதாயின் கோர்ட்டார் பஞ்சாயத்தாரின் தீர்ப்பு முழுவதையும் ரத்துச்செய்து விடக் கூடும். புத்தியுள்ள எந்த வக்கீலும், தனது கட்சிக்காரரின் வழக்கு அவ்வித நிலையெய்துமாறு செய்து கொள்ளமாட்டான். எது எவ்வாறிருந்த போதிலும் அத்தகைய அபாயத்தை மேற்கொள்ளுபவன் நானல்லூ. இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு அனுப்பப்படுவதாயின், நமது கட்சிக் காரருக்கு எவ்வளவு செலவு அதனால் ஏற்படுமென்றும், எத்தகைய தீர்ப்புக் கிடைக்குமென்றும் எவரும் கூறமுடியாது" என்று கூறினார்.

இச்சம்பாஷணை நடக்கையில் கட்சிக் காரரு மிருந்தார்.

நான் கூறியதாவது:—"நாமும் நமது கட்சிக்காரும் அவ்வபாயத்தை மேற்கொள்ள வேண்டுவதுதான் என எனக்குத் தோன்றுகிறது. தவறை நாம் ஒப்புக்கொள்ளாத காரணத்தால் மட்டும் பஞ்சாயத்தாரது தீர்ப்பைக் கோர்ட்டார் ஏற்றுக் கொள்ளுவார் என்ற உறுதி எங்கேனு மிருக்கிறதா? நாம் ஒப்புக்கொள்ளுவதால் நமது கட்சிக் காரர்களுக்குத் துன்பம் வருவதாயின் அதனால் என்ன கஷ்டம்?"

"என்றாலும் நாம் [illegible] ஒப்புக்கொள்ள வேண்டும்" என்றார் பெரிய வக்கீல்.

"இத்தவறைக் கோர்ட்டார் கண்டுபிடித்து விடமாட்டாரென்றுவது அல்லது எதிர்க் கட்சியார் கண்டுபிடித்து விடமாட்டார்களென்றுவது ஏதாவது உறுதியுண்டா?" என்றேன் நான்.

"நல்லது. அப்படியாயின் இவ்வழக்கை நீங்கள் வாதிப்பீர்களா? உங்களது நிபந்தனைகளின்படி இவ்வழக்கை வாதிக்க நான் தயாராயில்லை" என்று பெரியவக்கீல் உறுதியோடு கூறினார்.

"நீங்கள் வாதிக்க முடியா விட்டால் நமது கட்சிக்காரருக்கு விருப்பமாயின். நான் இவ்வழக்கை வாதிக்கத் தயாராயிருக்கிறேன். இத்தவறு ஒப்புக்கொள்ளப்படவில்லையாயின் இவ்வழக்கில் நான் சிறிதும் சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியாது" என்று பணிவாகத் தெரிவித்துக் கொண்டேன்.

இவ்வாறு கூறிக்கொண்டே எனது கட்சிக் காரரைத் திரும்பிப்பார்த்தேன். அவருக்குச்சிறிது மனக்குழப்ப மேற்பட்டது. இவ்வழக்கு ஆரம்ப முதலே நான் அதில் சம்பந்தப்பட்டிருக்கிறேன். எனது கட்சிக்காரர் என்னை முற்றும் நம்பியிருந்தார். அவருக்கு என்னை நன்றாகத்தெரியும். "நல்லது. தவறை [illegible] இவ்வழக்[illegible] யுங்கள் [illegible] தோல்[illegible] ஏற்பட வேண்டு மென்றிருக்குமாயின் நாம் தோல்வியடைவோம். உண்மையைக் கடவுள் பாதுகாப்பார்" என்று கூறினார்.

எனக்குச்சந்தோஷ மேற்பட்டது. இதற்குக் குறைவான பதிலை அவரிடமிருந்து நான் எதிர்பார்க்கவில்லை. பெரிய வக்கீல் மீண்டும் என்னை எச்சரித்[illegible] எனது பிடிவாதத்திற்காக மனம் இரங்கினார். அத்துடன் எனக்கு ஆசியும் கூறினர்.

கோர்ட்டில் நடந்த விவரங்களை அடுத்த அத்தியாயத்தில் கவனிப்போம்.

நமது தபால் பெட்டி.

மறுப்பு.

நாளிது பங்குனி மாதம் ௪௦ ம் தேதியில் பிரசுரமான தங்கள் பத்திரிகையில் ௧௦-வது பக்கத்தில் 'காரைக்குடி யூனியன் போர்டு எலக்ஷன்' என்ற தலையங்கத்தின் கீழ் என் சம்பந்தமாக எழுதப்பட்டிருக்கும் விஷயங்களுக்கு எவ்வித ஆதாரமுமில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன், என ராவ்சாகப் எம். ஆர். சுப்பய்யா செட்டியார் எழுதுகிறார்.

ஃ ஃ

யூனியன்போர்டு எலெக்ஷன்.

புதிய தேர்தல் ஏப்ரில் ௨௭-ந் தேதி நடைபெறுமென்றும், ஏப்ரில் ௧௦-ந் தேதி நாமினேஷன் பேப்பர் போடவேண்டும் என்றும் யூனியனாபீஸில் நோட்டீஸ் ஒட்டப்பட்டிருக்கிறது. ஓட்டர் லிஸ்டு கேட்டால் இன்னும் அச்சாகவில்லை யென்று சொல்லப்படுகிறது. லிஸ்டு கிடைக்காவிட்டால் அபேட்சகராக எப்படி நிற்பதென்பது தெரியவில்லை. இது ஒருபுறமிருக்க, ஊருக்குள் எலெக்ஷன் கிளர்ச்சி பலமாகிவிட்டது. இரண்டாவது வார்டு ஸ்தானம் இரண்டுக்கு திருவாளர்களான சா. மு. முத்துராமன் செட்டியார், சழனிவாசல் பஞ்சாபகேசய்யர், என். எஸ். வெங்கட்டராமய்யர் ஆகியவர்கள் அபேட்சகர்களாக நிற்கக்கூடுமென்ற பேச்சு அந்த வார்டில் பலமாக இருக்கிறது. மூன்றாவது வார்டில் ராவ்சாகிப் மரு. சுப்பய்யா செட்டியாரவர்கள் போட்டியில்லாமல் தெரிந்தெடுக்கப்படக்கூடுமென்று கருதப்படுகிறது. நாலாவது வார்டில் திருவாளர் சித. நா. ராம. நாராயணன் செட்டியார் எல்லாரிடமும் ஓட்டுக்குச் சொல்லிவருகிறார். இவரோடு போட்டி போட யார் முன் வருகிறார்கள் என்பது தெரியவில்லை. போட்டியில்லாமல் நாலாவது வார்டு எலக்ஷன் நடக்கப்போவதில்லை. ஆனால் திரு நாராயணன் செட்டியார் கொண்டுவரும் நூற்றுக்கணக்கான சிபார்சுக் காகிதங்களையும் அலையும் அலைச்சலையும் எதிர்க்கும்படியான ஆள் நின்றாலல்லாது போட்டிபோட முடியாதென்பது சிலருடைய அபிப்பிராயம். இவைகளை இப்போது கவனிப்பாரில்லை என்பது பலர் கருத்து. ஐந்தாவது வார்டில் திருவாளர் பனை. மெ. மெ. பழனியப்ப செட்டியாரவர்கள் ஒரு ஸ்தானத்திற்கு அபேட்சகராக வரக்கூடும். இன்னொரு ஸ்தானத்திற்கு யார் வரப்போகிறார்களென்பது தெரியவில்லை. இதில் பெரும் போட்டி ஏற்பட நியாயமில்லை. ஆறாவது வார்டில் திருவாளர்களான மெ. செ. சொக்கலிங்கஞ் செட்டியார், குமரப்பனம்பலம் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. ஏழாவது வார்டில் திருவாளர்களான பெரி. க. இராமநாதன் செட்டியார், மெ. ப. சு. காசிவிசுவநாதன் செட்டியார், சு. ராம. அரு. அருணாசலச் செட்டியார், மெ. மெ. சு. நடேசன் செட்டியார் முதலியோர் நிற்கப் போகிறார்கள் என்று வதந்தி உலாவுகிறது. எல்லாம் ஏப்ரல் ௧௦-ந் தேதி நிச்சயமாகிவிடக்கூடும். நாமினேஷன் ஸ்தானத்திற்கு முயற்சி செய்ய இனி வகை கிடையாது. தாழ்த்தப்பட்ட வகுப்பார், மகமதியர், பெண் அங்கத்தவர் இன்னும் எலெக்ஷனில் வரமுடியாத சிறு தொகையினரான ஜாதியார் ஆகியோருக்காக ஏற்பட்டுள்ள மூன்று ஸ்தானங்களில் ஒன்றுதான் பாக்கியிருக்கிறது. அதிலும் பிரபுக்கள் பாய நிச்சயமாக முடியாது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

டேரியா.

காரைக்குடி திருவாளர் ஆவி. பழ. சித. இராமநாதன் செட்டியாரவர்கள் நாளிது பங்குனிமீ ௯-உ இங்கு வந்து சேர்ந்தார்களென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஃ ஃ

திருவானைக்காவல்.

இப்பூவுலகின் கண் சிறப்புற்ற சிவஸ்தலங்களில் உயர்வுற்ற பஞ்சஸ்தலங்களில் ஒன்றாகிய திருவானைக்காவலில் ஸ்ரீ அகிலாண்டம்மை சமேத ஸ்ரீஜெம்புநாதருடன் கமலாசனக் கடவுளாகிய பிரமதேவரால் ஏற்பட்டு பிரதி வருஷமும் நடந்து வருகிற பஞ்சப்பிரகார காட்சியானது நிகழும் பிரபவ ஆண்டு பங்குனித்திங்கள் உச ம் நாள் (டு—௪—உஅ) குருவாரம் மாலை ௯-மணியிலிருந்து நடைபெறுவதால் சிவநேசச் செல்வர்களனைவரும் வந்து அக்காட்சியைக் கண்ணுற்றின்புறுமாறு ஷை தேவஸ்தானம் டிரஸ்டி திரு சி. மு. அரு. நாராயணன் செட்டியார் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

ஃ ஃ

ஆத்தங்குடி ஷை முத்துப்பட்டணம்.

மாதக்கூட்டம்:— நாவுக்கரசு நற்சபையின் இரண்டாவதாண்டு ௧௧-வது மாதக் கூட்டம் நாளிது பங்குனித்திங்கள் எட்டாம்நாள் பிற்பகல் ரு-மணி முதல் திரு. காசிச் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்களான மாணவன் கதி. பழனியப்பன், டி. பி. மலையப்பய்யர், மு. திருவேங்கடமய்யங்கார், சித. நாராயணன் செட்டியார், நடராஜதேசிகர், அழ. அருணாசலச் செட்டியார், ஆ. சத்திவேற்பிள்ளை, சு. வீர. கதரேசச் செட்டியார் இவர்கள் முறையே "நட்பு, பக்தி, முயற்சி, நமது சமூக நிலை, கடவுள் வழிபாடு, சீர்திருத்தம், உண்மை, பண்டைப் பெரியாரும் தற்கால அறிஞரும்," என்பன பற்றி அரிய விரிவுரை பகர்ந்த பிறகு தலைவர் முடிவுரையுடனும் ஆ. சத்திவேற்பிள்ளை யவர்களால் ஒரு வாழ்த்துக்கவி பாடப்பெற்றும் வந்தன வாழ்த்துடனும் இரவு அ-௩௦ மணிக்கு அவை இனிது நிறைவெய்தியது, என்று உபகாரியதரிசி, திரு. ராம. சோமசுந்தரன் தெரிவிக்கிறார்.

ஃ ஃ

இராஜகிரி.

கால்கோள் விழா:—இவ்வூரில் அன்புச் சாமியாரெனும் சுவாமிநாதப் புலவரால் புதிதாக ஸ்தாபிக்கப் படவிருக்கும் கல்விச் சாலையின் கட்டிட கால்கோள்விழா நாளிது பங்குனிமாதம் ௧௨-ம் நாள் நடைபெற்றது. அஸ்திவாரக்கல் நாட்டுவதற்கென காரைக்குடியிலிருந்து வந்திருந்த திருவாளர் சா. லெ. செ. செட்டியப்ப செட்டியாரவர்கள் அன்று மாலை சிவகிரியிலிருந்து அழைத்து வரப் பெற்றார்கள். இவ்விழாவிற்கு சிவகிரியிலுள்ள பல முக்கியஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர். சிற்றுண்டி வழங்கப் பெற்று முடிந்ததும், கட்டிடம் கட்டப் பெறவிருக்கும் 'அன்புக்கடல்' எனும் இடத்திற்குத் திரு செட்டியாரவர்கள் வாத்திய கோஷங்கள் முழங்க, அன்பர்கள்புடைசூழ அழைத்துச் செல்லப் பட்டார்கள். ஆங்கு மாலை ௬-மணி சுமாருக்கு அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டதும் திரு சாமிநாதப் புலவரவர்கள்சில சொற்கள் வழங்கிய பின்னர் திரு செட்டியாரவர்கள் கல்வியின் அவசியத்தைப் பற்றியும், திரு புலவரவர்களது முயற்சியைப் பற்றியும் சிறிது நேரம்பேசிய பின், திருவாளர் க. ச. கிருஷ்ணன் அவர்கள் (குமரன் உதவி ஆசிரியர்) எத்த[illegible] கல்வி போதிக்க வேண்டுமென்பது [illegible]டங்கள் பேசினார்கள். பின் [illegible] முடிவுரை கூறியதும் [illegible] அழைத்துச் செல்லப்பட[illegible] தரிசனம் செய்த பின் [illegible] கோவிலுக்கு அ[illegible] வரப்பட்டார. அங்கு பொது [illegible] சார்பாக திரு செட்டி[illegible] [illegible]வேற்பு இதழ் [illegible] திரு [illegible]நாதப்புலவர் அவர்க[illegible] [illegible]கொடுக்கப்பெற்றதும் திரு [illegible]வர்கள் சில உரைகள் வழங்கியதும் வந்தன வாழ்த்துடன் கூட்டம் கலைந்தது. பிறகு செட்டியாரவர்களும் மற்றை[illegible] [illegible] சிவகிரி சென்றார்கள், என ஒரு நிரு[illegible] எழுதுகிறார்.

குமரன் ஆண்டு மடல்.

காளென் செயும்! வினைதானென்
செயும்! எனைநாடி வந்த
கோளென் செயும்! கொடுங்கூற்
றென் செயும்! குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் ஷண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்
னேவந்து தோன்றிடினே.

—கந்தரலங்காரம்.

குமரன், காரைக்குடி.
பிரபவ - ௵ பங்குனி - ௴ - கா - ௨

பொங்கல் : : வந்துவிட்டது.

பங்குனிமாதம் பிறந்தால் பொங்கல்களும் தொடங்கப்பட்டு விடுகின்றன. பொங்கல் என்ற சொல்லுக்கு உயிர்க்கொலை புரிதல் என்ற பொருள் கிடையாது. ஆனால் இன்று உயிர்க் கொலைக்குக் காரணமாகவே பொங்கல்கள் நடைபெறுகின்றன. மாரியம்மனுக்கும் கருப்பண்ணனுக்கும் பிற சில தெய்வங்கட்கும் திருவிழா நடத்துவதாகக்கூறி மக்கள் ஆடு கோழிகளை வதைத்து வருகின்றனர். இவ்வநியாயம் நடைபெறுங்காலம் பங்குனி தொடக்கமாகவே இருக்கின்றது. இது முதல் இன்னுஞ் சில மாதங்கள் வரை இவ்வாட்டம் நடைபெறும். ஒரே நாளில் நூற்றுக் கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் பதினயிரக் கணக்காகவும் ஆடுகள் வெட்டிச் சாய்க்கப்படும். இவ் வெறியாட்டினைத் தெய்வ பக்தி யென்னும் பெயரால் வழங்குவது கொடுமை. சிவனடியாராக விளங்கும் சைவ நன்மக்களும், விஷ்ணு அடியாரான [illegible]வ மக்களும் ஆடு வெட்டிப் பொங்கலிடுதலில் முனைந்து நிற்பது சகிக்க முடியாத அநியாயமாகும். அவனையன்றி யோர் தெய்வமில்லை' யெனும் உண்மை கண்ட சைவ மக்கள் காளியையும் கருப்பனையும் நொண்டியையும் கருதி நெறியல்லா நெறிச் சென்று உயிர்க் கொலை புரிவது பெரும் பாதகமன்றோ? சென்ற சில ஆண்டுகளாக இக் கொலை சிறிது சிறிதாகக் குறைவுற்று வருகிறது. எனினும் ஆங்காங்குள்ள மெய்யன்பர்கள் முயன்று இவ் வநியாயத்தையொழித்தல் வேண்டும். இவ் வழக்கத்தை நிறுத்தினால் சுவாமி குறை வருமென்பதும், நோயும் சாவும் துன்பமும்வருமென்பதும்வீண்கேலிப் பேச்சன்றி வேறன்று. அறிவிலா மக்கள் சிலர் சாமிபாடிகட்குப் பயந்து கட்டிவிட்ட கதைகளை நம்பி ஏமாற வேண்டிய அவசிய மொன்றுமில்லை. சென்ற பல ஆண்டுகளாகப் பலர் இவ் வழக்கத்தை விட்டொழித்து வருகின்றனர். அவர்கள் யாவரும் சுகமாகவேயிருக்கின்றனர். இரண்டொருவருக்கு ஏதாவது கஷ்டம் வந்தால் இந்தக் குறைதானோ வென்று ஐயப்படுதற்கும் காரணமில்லை. வருடந்தோறும் ஆடறுத்து வருவோர் சிரஞ்சீவிகளாகவாவது, துன்பத்தைக் காணாத இன்ப வாழ்வினராகவாவது இருப்பதைக் காண்கிறோமில்லை. சுவாமியை வணங்குதற்கு ஆண்டவனால் படைக்கப்பட்ட உயிர்ப்பிராணிகளைக் கொலை செய்து படைக்க வேண்டுமென்று எந்நூலும் கூறவில்லை. அறிவுள்ள எம்மதமும் கூறவில்லை யென்பதையும் ஞாபகப் படுத்துகிறோம். காரணமின்றிச் சாமியாடும் பூசாரிக்குப் பயந்து உயிர்க் கொலை புரிந்து வன் கண்ணராதல் வேண்டாம், வேண்டாம்.

இருபத்தொன்றும் பதினாறும்.

இந்தியாச்சட்டசபையில் வந்திருக்கும் விவாக வயது மசோதாவைப்பற்றி நேயர்கள் அறிவார்கள். இம்மசோதாவானது இன்றியமையாததாகுமென்று ஒவ்வொரு தேசாபிமானியும் ஒவ்வொரு ஆசாரத் திருத்தக்காரரும் ஒப்புக்கொள்கின்றனர். தேசத்தின் நிலையையும் ஹிந்து சமுதாயத்தின் தற்கால நிலையையும் யோசித்துப் பார்ப்பவருக்கும் இரக்கமுடையவருக்கும் இத்தீர்மானமொன்று அவசியமாகுமென்று தோன்றாமற் போகாது. பத்து வயதிலும் பன்னிரண்டு வயதிலும் பெண் குழந்தைகள் பிள்ளைபெற்று வாடிவதங்கிப் போவதை நாள்தோறுங் காண்கிறோம். பெண்மக்கள் பருவமடைந்த பின்னர்-உடல்சிறிது உரம்பெற்ற பின்னர் மணமுடிக்கவேண்டு மென்பதை வற்புறுத்தவே இம்மசோதா கொண்டு வரப்படுகிறது. இதனைக்கண்டு பலர் மருள்கின்றனர். இதுசட்டமாக்கப்பட்டால் ஹிந்துமதமே அழிந்து பட்டுப் போகுமென்று சில வைதிகர் கூறுகின்றனர். ஜனசமூகத்தை அழித்துத் தன் புறத்தவேஹிந்துமதம்தோன்றியிருக்கிறது போலும்! இந்தச் சட்டத்தால் ஹிந்து சமூகம் நன்னிலை யடைந்து இன்ப வாழ்வு வாழ்தல் கூடுமன்றி அழிந்துபோகக்காரணமொன்றுமில்லை இப்போதுள்ள ஹிந்து மக்களுள் சில ஜாதியார் தவிர ஏனையோர் முழுமையும் பாலிய விவாகம் செய்வதில்லை. அவர்கள் அடைந்த துன்ப மென்னே? சில சிறு ஜாதியாருள் நின்ற பால்ய விவாக வழக்கமானது எஞ்சிய ஜாதியாருள்ளும் பரவ ஆரம்பிக்கிறது. ஆதலால் அதனைச் சட்டஞ்செய்து ஒழித்தல் அவசிய மாகிவிட்டது. இம் மசோதாவை மறுக்க முடியாத சிலர் “விஷயம் முக்கியமானதுதான்; ஆனால் அரசாங்கச் சட்ட மூலம் தடுக்கக் கூடாது” என்று வேதாந்தம் பேசுகின்றனர். இதற் கென்ன பொருளென்பது விளங்கவில்லை. அரசாங்கச் சட்டமின்றி இது நடக்கப்போவதில்லை. தனிப் பிரசாரத்தால் இக்காரியத்தில் சித்தி பெறக் கூடுமென்று நம்புவோர் இச்சட்டத்தை யேன் மறுக்க வேண்டுமோ? காரியத்தில் குழந்தை மணம் தடுக்கப் பட்டால் சட்டம் தானே செத்துப் போய்விடுமன்றோ? எப்படியும் இச்சட்டம் வேண்டாமென்று கூறுவோர் உண்மையில் குழந்தை மணத்தை ஆதரிப்போரேயாகின்றனர். இம் மசோதாவை ஆதரிக்கக் கூடாதென்று சங்கராச்சாரியாரும் சில ஐயர் ஐயங்கார் மார்களும் கண்டனக் கூட்டங்கள் போட்டு ஆர்ப்பாட்டங்கள் செய்தனர். இவையொரு புறமிருக்க,

முந்தாநாள் கூடிய சென்னைச்சட்ட சபையில் “பிள்ளைகட்கு விவாக வயதை இருபத்தொன்றாகவும், பெண்களின் வயதைப் பதினறாகவும் உயர்த்த வேண்டுமென்று இச்சபை அபிப்பிராயப்படுவதை இந்தியா கவர்ன்மெண்டிற் கறிவிக்க வேண்டும்” என்ற தீர்மானம் டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டியால் கொண்டுவரப் பட்டு நிறைவேறி யிருக்கிறது. யாரும் இதனைப் பலமாக எதிர்க்கவில்லை. ஓட்டும் எடுக்கப்படவில்லை யென்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம்.

இந்தியாச் சட்டசபைக்கு வந்து செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டிருந்த இந்த மசோதா கமிட்டியாரால் பரிசீலனை செய்யப்பட்டு விட்டது. அதனைப் பொதுஜனங்களின் அபிப்பிராயத்தை அறிவதற்காகப் பிரசுரிக்க வேண்டுமென்று சென்ற திங்களன்று கூடிய இந்தியாச் சட்ட சபையில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இந்திய நாட்டில் பற்றுள்ளங்கொண்ட அன்பர்கள் “இத்திருத்த மசோதாவை அங்கீகரிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

எண்டிசைக் காட்சி.

பர்மா விஜயம்.

சமூகத் தொண்டில் பேரார்வமும் அறிவும் அன்பும் நிறைந்த திருவாளர் அரு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் பர்மாவுக்குச் சென்ற வெள்ளியன்று இங்கிருந்து பிரயாணமானார்கள். பியாப்புவேயில் சிறிது காலம் தங்குவார்க ளென்றறிகிறோம். கல்வி கற்று வெளிவந்தது முதல் மக்கள் தொண்டில் ஈடுபட்டிருந்த அன்பர் சோமசுந்தரர் முதன்மையாக இப்பொழுதே கடல் கடந்து செல்கிறார். இவரது பிரயாணம் பெரும் பயன் விளைக்குமென்று நம்புகிறோம்.

அரசாங்க அறிக்கை.

பத்திரிகைகளின்நிலைமையைப்பற்றிச் சென்னை அரசாங்கத்தார் வெளியிட்ட அறிக்கையில், “ஹிந்து” பத்திரிகையின் சந்தாதார் மிகுதியாக அதிகரித்திருக்கிறதாகவும் “ஜஸ்டிஸ்” பத்திரிகையின் சந்தாதார் பெரிதுங் குறைந்து விட்ட தென்றும் கூறப்பட்டிருந்தது. இதனை ஜஸ்டிஸ் பத்திரிகைச் சொந்தக்காரர்ஆக்ஷேபித்தனர். குறிப்பிட்ட ஆண்டில் 'ஜஸ்டிஸ்' பத்திரிகை ஏராளமான சந்தாதாரைப் பெற்று எங்கும் பரவி வருவதை உலகமறியும். இந்த மாதிரி மாறுபாடாக அரசாங்கத்தார் வெளியிடுவதால் பத்திரிகைகள் ஒருவாறு பாதிக்கப்படு மென்பதை அரசாங்கத்தார் அறிதல் வேண்டும். 'ஜஸ்டிஸ்' சொந்தக்காரரின் ஆக்ஷேபனையின்மேல் அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள அறிக்கை மற்றோரிடத்தில் வெளியிடப் பட்டிருக்கிறது. என்னென்ன சூழ்ச்சிகள் நடைபெறுகிற தென்பதை இதிலிருந்து நேயர்களறியலாம்.

படுபாவி டயரின் சரித்திரம்.

பஞ்சாபில் கொடுமை புரிந்த டயரை நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அந்த டயரின் சரித்திரத்தை எழுதுமாறு டயரின் மனைவியும் டயரின் ஞாபகச் சின்னக் கமிட்டியாரும் மார்னிங் போஸ்டு பத்திரிகையிலுள்ள மிஸ்டர் இவன்கால்வினைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனராம். இந்தியாவிலுள்ள டயரின் நண்பர்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்த மிஸ்டர் கால்வின் பிரியப்படுகிறாராம். இந்தச் சரித்திரக்காரர் இந்தியாவிலுள்ள டயரின் நண்பர்களுடன் மட்டும் கடிதப் போக்கு வரவு நடத்துவதால் உண்மைச்சரித்திரம் எழுதிவிட முடியாதென்பதையும், பாஞ்சாலப் பொது ஜனங்களையும் இந்திய தேசியத் தலைவர்களையும் கலந்து விசாரித் தெழுதினால்தான் முடியுமென்பதையும் உணர வேண்டும்.

எம். டி. சுப்பிரமணியமுதலியார்.

உத்தமபாளையம் திரு எம். டி. சுப்பிரமணிய முதலியாரவர்கள் பங்குனிமீ ௧௦௨ இவ்வுலக வாழ்வை நீத்தார்கள் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். பிராமணரல்லாதார் இயக்கத்திற்கு இப் பகுதியில் போதாரமாக விளங்கியவர். சிறந்த தமிழாபிமானம் உள்ளவர். கொடை வள்ளல். கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் உடையவர். கதாபிமானி. இத்தகைய தேசபக்தரைத் தமிழ் நாடு இழக்க நேர்ந்தது பெரு வருத்தந்தருவதாகும்.

தேவகோட்டை.

இவ்வூர் அடிஷனல் ஜில்லா முனிசிப் கோர்ட்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து எடுத்துவிடப்படும் என்று கூறப்படுகிறது.

அமராவதிபுதூர்.

சென்ற செவ்வாயன்று மாலை ஐந்து மணிக்கு கீழச்சிவற்பட்டி சாண்டோ மு. லெ. சோமசுந்தரச்செட்டியாரவர்கள், சங்கிலியை அறுத்தல், காரை நிறுத்தல், பலகையில் கையினால்ஆணி அறைதல், கரும் பவுண்டு கனமுள்ள இரும்பைத் தூக்கி நிறுத்தல் முதலிய உடல்வலித் தொழில்களைச் செய்து காட்டினார்கள். உள்ளூரிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தனரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

உள்ளூர்ச் செய்தி.

சென்னை உண்டியல் வட்டம்	௦—௬—௦
இரங்கூன் உண்டியல் வட்டம்	௧—௬—௦
பவுன் விலை	௧௩—௯—௦
சென்னை நடப்பு வட்டி மாசிமீ	௦—௧௪—௯

யூனியன்போர்டு எலக்ஷன்:—வருகிற ஏப்ரல்மீ ௧௦௨ காண்டிடேட்டாக நிற்பவர் பாரம்போடுதல் வேண்டுமென்றும், ஷை மீ ௨௳ எலெக்ஷன் நடக்குமென்றும் யூனியன் போர்டு அறிக்கை கூறுகிறது.

ஸ்ரீ வேணுகோபாலசுவாமி உற்சவம்:—இவ்வாலய ஸ்ரீ ராமநவமி உற்சவம் இன்று ஆரம்பமாகும். உ௫௨ ரதோத்ஸவம் நடைபெறும்.

உற்சவத்தில் நடக்கும் சங்கீதக் கச்சேரிகளின் விவரம் வருமாறு:—

(க) பிரபவ௵ பங்குனிமீ ௧௬௨ (௩-௪-௨அ) மாலை ௪ மணிக்குத் திருவிடமருதூர் வீருசாமி மேளக்கச்சேரி.

(உ) உ௦௨ (௧-௪-௨அ) மாலை ௪ மணிக்கு சிவகங்கை திரு தசரதராம பாகவதரவர்கள் கதை.

(ங) உக௨ (உ-௪-௨அ) மாலை ௪ மணிக்கு காரைக்குடி வீணை பிரதர்ஸ் வீணை, திரு ஸீதாராமய்யரவர்கள் மோர்சங்கு, மதராஸ் ஸ்ரீமான் வேணு நாயுடு மிருதங்கம்.

(ச) உஉ௨ (௩-௪-௨அ) மாலை ௪ மணிக்கு திருப்பாம்பரம் ஸ்ரீமான் சாமிநாதன் பில்லாங்குழல், மருங்காபுரி ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யரவர்கள் பிடில், ஸ்ரீமான் ஸீதாராமய்யாவர்கள் மோர்சங்கு, மதராஸ் ஸ்ரீமான் வேணு நாயுடு மிருதங்கம்.

(ரு) உங௨ (௪-௪-௨அ) மாலை ௪ மணிக்கு அரியக்குடி ஸ்ரீமான் ராமானுஜய்யங்காரவர்கள் பாட்டு, மருங்காபுரி ஸ்ரீமான் கோபால கிருஷ்ணய்யரவர்கள் பிடில், ஸ்ரீமான் ஸீதாராமய்யர் அவர்கள் மோர்சங்கு, மதராஸ் ஸ்ரீமான் வேணு நாயுடு மிருதங்கம்.

(சா) உச௨ (ரு-௪-௨அ) மாலை ௪ மணிக்கு மதராஸ் ஸ்ரீமான் சடகோபாச்சாரியார் அவர்கள் கதை.

(எ) உரு௨ (எ—௪—௨அ) மாலை௪ மணிக்கு திருவிசநல்லூர் திரு. ராமஸாமி சாஸ்திரி அவர்கள் விகடம்.

நாகநாதபுரம் உத்ஸவம்:—ஸ்ரீகிருஷ்ணமூர்த்திப்பெருமாளுக்கு நாளிது மீ ௧௦௨ காப்புக்கட்டி உத்ஸவம் மிக விமரிசையாக நடைபெறுகின்றது. ௧௩௨ இரவு கெருடசேவையில் ஏராளமான வைரநகைகளை அணிந்து கொண்டு பெருமாள் காக்ஷிகொடுத்தார். இன்று வெள்ளிக் குதிரை வாகனத்தில் எழுந்தருளுவார். கீரனூர் சகோதரர்களின் நாகசுரக்கச்சேரி இன்று மாலை ௪-மணி சுமாருக்கு நடைபெறும். சுவாமி புறப்பாடு முதலியன ஜனங்கட்குச் சௌகரியமாக முன்னேரத்திலேயே நடைபெறுகின்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

நலஉரிமைத் தொண்டர் சங்கம்:—இச்சங்கத்தின்பொதுக்கூட்டமொன்று சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று மாலை தேவகோட்டை ஜில்லா முனிசிப் திருவாளர் கோமதி நாயகம்பிள்ளை அவர்களதுதலைமையில்நடைபெற்றது கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்றதும் தலைவர் முன்னுரையாகச் சில இன்னுரைகள் வழங்கிய பின்னர் திருவாளர்களான ராமஸாமி, மெய்யப்பன், ஆவி. லெ. அருணாசலன், சா. கணேசன் ஆதியோர் முறையே “தமிழர் நிலை,” 'ஜீவகாருண்யம்,' “பெண்கல்வி,” “நாட்டின் வளர்ச்சி” எனும் பொருட்கள் பற்றிச் சொற்பொழி வாற்றினர்கள். தலைவர் முடிவுரையுடனும் வந்தன வாழ்த்துடனும் இரவு ௬-மணிக்குக் கூட்டம் நிறைவெய்தியது, என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

தந்திச் செய்தி.

சைகோன், பங்குனி-மீ ௧௬௨

உண்டியல் விலை	நூற்று நாற்பதரை.
சிங்கப்பூர் வட்டம்	ஒன்பதேகால்.

பினங்கு பங்குனிமீ ௧௬௨

உண்டியல்விலை	நூற்று ஐம்பத்து நான்கு.
ஈயம் விலை	நூற்று இருபத்திரெண்டு.
ரப்பர் விலை	ஐம்பத்தெட்டு.

இரங்கூன் பங்குனிமீ ௧௬௨

தவணை வட்டி	௦-௧௩-௦
மூன்றுமாத வியன் வட்டி	௦-ரு-௦
இரண்டுமாத வியன் வட்டி	௦-௪-௬
பழைய பவுன்	௧௩-௧௧-௬
புதிய பவுன்	௧௩-எ-௬
படகு நெல்	௧௬ரு
ரயில் நெல்	௧௬௦
ஸ்பெஷல் அரிசி	௩௬௦
சிறிய மில் அரிசி	௪௨ரு
பெரிய மில் அரிசி	௪௨௦
மில்சார் புழுங்கலரிசி	௪௪௦, ௪ரு௦
நசேன் அரிசி	௪௦௦
ஏ. ஒன் குருணை	௩அரு
பி. ஒன் குருணை	௩௬௦
மொச்சை	௩௧அ
சிவப்பு பீன்ஸ்	உரு௦
வெள்ளை பீன்ஸ்	௩௧௦
சோளம்	உஎ௦
மிளகாய்	ரு௨
பருத்தி விதை	௧௦

பண மார்க்கட் மிகப் பிரியம்.

லண்டன் மார்க்கெட்.

(From “Hindu”)

லண்டன் பங்குனி-மீ ௧௪௨

பார்த்தங்கம்:— நயம் ஒரு அவுன்ஸ் ௪—௪—௧௧இ.

ரப்பர்:— புகைபோட்டது ஸ்டாண்டர்டு. வாங்குபவர் விலை ஒரு ஷிலிங் முக்காலே அரைக்கால் பென்ஸ்.

ஷை விற்பவர் விலை ஒரு ஷிலிங் ஒரு பென்ஸ்.

செம்பு:— இங்கிலீஷ் நயம் அறுபத்தைந்தே அரைக்கால் பவுன்.

ஷிபிராஸ்பார்ஸ்:—எழுபத்திகாலே முக்கால் பவுன்.

ஈயம்:—இங்கிலீஷ் இன்கோட் இருநூற்று முப்பத்தொன்பதே முக்கால் பவுன்.

ஷை ஸ்டாண்டர்டு:— இருநூற்று முப்பத்தொன்பதரையே அரைக்கால் பவுன்.

சென்னை பங்குனி-மீ ௧௬௨

பாங்கியில் மலாய் நாட்டு உண்டியல் விலை விற்பது நூற்றைம்பத்தாறு.

ஷை வாங்குவது நூற்றைம்பது.

இம்பீரியல்பாங்வட்டி ஏழுபெர்சன்ட்.

இங்கிலாந்து பாங்வட்டி நாலரை பெர்சன்ட்.

பவுன் பதின்மூன்றரையுங்கால்வீசம் ரூபாய்.

புதிய போர்டு கார்.

புது மாடல் போர்டுகார் உலக முழுவதும் இன்று (மார்ச்சு-மீ உகூ௨) விற்பனைக்கு ஆரம்பமாகுமெனத் தெரிகிறது.

கோலாலம்பூர்.

டங்ஙனி உத்தரம்:— ஸ்ரீ தெண்டாயுதபாணிக்குப் பங்குனி உத்தர உற்சவம் இம்மதி உக௨ ஆரம்பமாகி நடைபெறுமென்று நகரத்தார் அறிவிக்கின்றனர்.

வருமானவரி.

ஒரு கம்பெனியின் பங்குதாரர்களில் ஒருவர் மேற்படி கம்பெனிக்குக் கடன் கொடுத்த தொகைக்கு வட்டிவாங்கிக் கொண்டால், அந்த வட்டிக்குக் கம்பெனியார் வருமானவரி செலுத்த வேண்டுமா என்ற பிரச்னை கனம் சிப் ஜஸ்டிஸ், நீதிபதிகள் வாலேஸ், ராமேசம், பீஸ்லி, திருவேங்கிடாச்சாரி இவர்களடங்கிய புல் பெஞ்சு முன்பாக விவாதிக்கப்பட்டது. திருப்பூரில் “எ. எல். எஸ். பி. பி. எல்” என்ற விலாசமுடைய கம்பெனி மூலதனத்தில் முக்கால் பங்கு நூ. கறிஎறிரு ஒருவராலும் கால்பங்கு மற்றொருவராலும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. பெரிய பங்குக்காரர் மேற்படி கம்பெனிக்கு லக்ஷரூபாய் வரை வட்டிக்குக் கடன் கொடுத்திருந்தார். மேற்படி வட்டித் தொகைக்கும் சேர்த்து வருமானவரி விதிக்கப்பட்டது. மேற்படி நான்கு லக்ஷ ரூபாய் கம்பெனியின் மூலதனமாகும் என்றும், அதிலிருந்துகிடைத்த லாபமே மேற்படி வட்டிரூபாய் ௪௦எறின என்றும் வருமானவரி இலாகா சார்பில் வாதிக்கப்பட்டது. ஷை தொகை கடன் வாங்கப்பட்டதென்றும், அதற்கும் கம்பெனி மூலதனத்துக்கும் சம்பந்த மில்லையென்றும், மேற்படி வட்டித்தொகை கம்பெனியின் சரியான செலவு என்றும் கம்பெனி சார்பாக வாதிக்கப்பட்டது. இதை கனம் நீதிபதிகள் ஏற்றுக்கொண்டு மேற்படி வட்டித்தொகைக்கு வருமானவரி விதிக்கக் கூடாதெனத் தீர்ப்பளித்து ரூ. ௧௦௦ செலவு தொகை ஷை கம்பெனிக்குக் கொடுக்கப்பட வேணுமாயும் வசூலிக்கப்பட்ட வரி வாபஸ் செய்யப்பட வேண்டுமாயும் தீர்ப்புச் செய்தனர்.

ஜஸ்டிஸ் பத்திரிகையும் அரசாங்கத்தார் மன்னிப்பும்.

சென்னை சர்க்கார் பொது இலாக்காவிலிருந்து இம்மாதம் உங தேதி பின் வரும் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது:—

௧௯உ௬-உஎ-ம் ௵த்திய சென்னை மாகாண அறிக்கையின் உ-வது பாகம் உ௯௬-ம் பாராவில் 'ஜஸ்டிஸ்' பத்திரிகையின்சந்தாதார்களைப்பற்றிச்சொல்லப்பட்டிருக்கிற விவரத்தையும், விசேஷமாய் அந்தப்பத்திரிகையின் சந்தாதார்களின் தொகை அதிகமாய்க் குறைந்துபோய்விட்டதென்று அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதையும் 'ஜஸ்டிஸ்' பத்திரிகையின் சொந்தக்காரர்கள் ஆட்சேபித்திருக்கிறார்கள். 'ஜஸ்டிஸ்' பத்திரிகை தனது சந்தாதாரர்கள் ௧௯உ௭-ம் வருடம் ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கத் தொடங்கி அவர்கள் தொகை மார்ச்சு மாதம் ௩௧-ந் தேதிக்குள் இரட்டித்துவிட்டதென்று கூறுகிறது. ஆனால் சர்க்கார் அறிக்கை ௧—௪—உ௬ முதல் ௩௧—௩—உ௬ வரையிலுள்ள காலத்தைத்தான் குறிப்பிடுகிற தென்பதை சர்க்கார் எடுத்துக்காட்ட விரும்புகின்றனர். ஜஸ்டிஸ் பத்திரிகை தன் சந்தாதாரர்கள் அதிகரித்திருப்பதாகக் கூறுவது ௩௧-௩-உ௬க்கு பிறகு ஏற்பட்டிருக்கு மென்பதைப்பற்றி சர்க்காருக்கு சந்தேகமில்லை. பத்திரிகைகளைப்பற்றி அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள கருத்துகளைப் பற்றியும் ஆட்சேபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இனிமேல் பத்திரிகைகளைப்பற்றி, சந்தாதாரர்கள் தொகை முதலிய தகராறுக்கு இடமான விஷயங்களை சர்க்கார் நிர்வாக அறிக்கையில் வெளியிடுவதையே நிறுத்திவிட சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்.

கப்பற் செய்தி.

நாகப்பட்டினத்திலிருந்து மலாய் நாட்டுக்குப் பின்வருங் கப்பல்கள் பின் வரும் தேதிகளில் புறப்படும்:—

எதியோபியா	மார்ச்சு	[illegible]
ரசுலா	ஏப்ரல்	[illegible]
எதியோபியா	ஏப்ரல்	[illegible]
ரோகிணு	ஏப்ரல்	[illegible]
எதியோபியா	ஏப்ரல்	[illegible]

குறிப்பு:— “எதியோபியா” கப்பல் பினங்கு போர்ட் சுவெட்டன் ஹாம் ஆகிய இரண்டு துறைமுகங்கட்கும் செல்லும்.

மலாய்நாட்டிலிருந்து புறப்படும் கப்பல்கள் நாகபட்டினத்துக்கு வந்து சேருகிற விவரம்:—

எதியோபியா	ஏப்ரல்	௧௦
ரோகிணு	ஏப்ரல்	௧௧
எதியோபியா	ஏப்ரல்	உ௪
ரசுலா	ஏப்ரல்	உரு

“எக்மா” கப்பல் சென்னையிலிருந்து ரங்கூனுக்கு பங்குனிமீ ௧அ௨ புறப்படும்.

லான்ஸ்பரி கூறுவது.

நாசத்தை உண்டுபண்ணக் கூடிய இயக்திரங்கள் மட்டும் ஆப்கன் அரசருக்குக் காண்பிக்கப்பட்டு, வாழ்வைப் பாதுகாக்க இங்கிலாந்து செய்துள்ள ஏற்பாடுகள் எதுவும் அவருக்கு அறிவிக்கப் படாதது பெரிதும் வருந்தத்தக்க தென்றும், தொழில் கட்சியினர் ஆதிக்கத்திற்கு வரும் வரையில் நிலைமை சீர்ப்படப் போவதில்லை யென்றும் மிஸ்டர் ஜியார்ஜ் லான்ஸ்பரி கூறியிருக்கிறார்.

பலதிரட்டு.

கண்டனூரில் இராஜகோபுரக் கும்பாபிஷேகம்

இவ்வூர் சிவாலய இராஜ கோபுரத்தின் கும்பாபிஷேகம் விபவ-ஞு வைகாசி மீ ௨௦உ நடைபெறும்.

நச்சாந்துபட்டியில் மஹா கும்பாபிஷேகம்.

இவ்வூர் சிவாலய மகா கும்பாபிஷேகம் விபவ-ஞு வைகாசி மீ ௨௦-உ. நடைபெறும்.

ஆத்தங்குடியில் மஹா கும்பாபிஷேகம்

காலை ௭கவ-க்கு மேல் ௭௨-இ-நாளிகைக்குள் விபவ-ஞு சித்திரை மீ ௭௪-உ இவ்வூர் சிவாலய மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

கழனிவாசலில் வித்தியாசாலை.

ஜெயங்கொண்டபுரம் திருவாளர். மெ. ராம. மெ. மெய்யப்ப செட்டியாரவர்களால் பஞ்சமர்களின் பொருட்டு காணப்படும் வித்தியாசாலைக் கட்டிடத்தை பங்குனி-மீ ௨௦-ம் தேதியன்று சுவாமி சகஜானந்தா அவர்கள் M. L. C, திறந்து வைப்பார்.

இறக்குமதித்தடை.

அமெரிக்காவிலிருந்து எண்ணெய் ஏராளமாக இறக்குமதி யாவதைத் தடுக்கக் கடுமையான நடவடிக்கைகள் பிரான்ஸ் தேசத்தில் எடுத்துக் கொள்ளப்படப் போகின்றனவாம். மோசூலிலும் மெஸபடோமியாவிலும் கிடைக்கும் எண்ணெயையும் ருஷியாவிலிருந்து எதிர்பார்க்கும் எண்ணெயையும் பிரான்ஸ் உபயோகித்துக் கொள்ள எண்ணுகிறதென்றும் சொல்லப்படுகிறது.

சிறந்த தர்மம்.

தம் சொத்தில் ஒரு லட்சத்துப் பதினையிரத்தையும், இக்கிலாந்தில் தமக்களிக்கப்பட்ட இரு பணமுடிப்புகளுக்குச் சேர்ந்துள்ள ரூ ௫௦ ஆயிரத்தையும், தம் மனைவியின் பேரால் ஓர் தர்ம நிதியாக வைத்து ஸ்திரீகளின் க்ஷய ரோக நிவிர்த்திக்காக ஓர் ஆஸ்பத்திரி கட்டப்போவதாகவும், அதில் குழந்தைகளுக்கும், சிகிச்சை செய்யலாமென்றும், ஆனால் ஆடவர்கள் சிகிச்சை பெறக்கூடாதென்றும் லாலாலஜபதிராய் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

சமூக பகிஷ்காரம்.

சமீபத்தில் நடைபெற்ற வங்காளச்சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் கூட்டமொன்றில், மந்திரிகள் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மான விஷயமாக நாடியா மகாராஜா நடந்துகொண்ட பான்மையை முன்னிட்டு, அக்கட்சியார் எவரும் அவரோடு சமூக விஷயங்களிலோ வேறு பொது விஷயங்களிலோ எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளக் கூடாதென்று ஓர் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

வேலை நிறுத்தம்.

ஏனைய தொழிலாளர்களிடம் அனுதாபம் காட்டி ஒப்பந்தத்திற்கு விரோதமாக வேலை நிறுத்தம் செய்த ௬௦௦௦ தொழிலாளர்கள் மீது இங்கிலாந்திலுள்ள லேனத்ஷீல்ட்ஸ் கவுண்டி கோர்ட்டில் கொண்டு வரப்பட்டிருந்த வழக்கில், ஒவ்வொரு தொழிலாளியும் செலவு தொகையுடன் ௨உ ஷில்லிங் ௯ பென்ஸ் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று நீதிபதி தீர்ப்புக் கூறியிருப்பதோடு, மற்றவர்களெல்லாம் மிகுந்த கஷ்டமடைந்திருக்கையில் சுரங்க வேலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது பெரிய முட்டாள் தனமென்றும் குறிப்பிட்டாராம்.

கடிதங்கள்.

தேவகோட்டை.

(ஒரு நிருபரிடமிருந்து)

தாலூகாபோர்டு கூட்டம்:— தேவகோட்டை தாலூகா போர்டு சபையின் கூட்டமொன்று நாளிது பங்குனி மாதம் கஉ. புதுவயலில் நடைபெற்றது. முடிவு செய்யப்பட்ட விஷயங்களுள் சில வருமாறு:—

(க) கொவிலூர் குன்னக்குடி ரோட்டுக்கு அவசரரிப்பேருக்காக ரூ உ௫0 அனுமதிக்கப் பெற்றது.

(உ) திருவாடானை காரநேஷன் ஹாலுக்கு அருகாமையிலுள்ள கிணற்றுக்கு ஒரு குழாயும் தொட்டியும் கட்ட ரூ உ௪௫0ம் ராஜசிங்கமங்கலத்தில் ஒரு கிணறுவெட்ட ரூ. அஉ0ம் அனுமதிக்கப் பெற்றது.

(௩) கோட்டைப் பட்டணத்திலுள்ள ஆயுர்வேத ஆஸ்பத்திரியை மித்ராவயலுக்கு மாற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

(௪) கீழச்செவல்பட்டி, விராமதி கிராமங்களை பஞ்சாயத்தாக அமைக்கலாமென முடிவு செய்யப்பெற்றது.

ஷண்முகநாதபட்டணம்.

காப்புக்கட்டுப்புதுமை:—இம்மதி கக-ம் நாள் வெள்ளிக்கிழமை அன்று பகல் பனைக்கரை திருவாளர் ச. இராமநாதச் செட்டியார் அவர்கள் மகள் வள்ளியம்மைக்குக் காப்புக்கட்டுப் புதுமை மிக சிறப்பாக நடைபெற்றது. பல அன்பர்கள் உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் வந்திருந்தார்கள். காலையிலும் மாலையிலும் காளையார் மங்கலத்திலிருந்து வந்த சிறு பையன்களின் நாகசுரக் கச்சேரி நடைபெற்றது. மாலை ச—௬0-மணிக்கு உபந்நியாசத்திற்கு என அமைக்கப்பெற்ற கொட்டகையில் தேவகோட்டை திருவாளர் அ. வெ. தியாகராஜா அவர்கள் தலைமையில் தேவகோட்டை திருவாளர் சோம. செல்லப்பா அவர்கள், 'சிறு தெய்வங்களும் கொலைப் பலியும்' என்னும் விஷயத்தையும், காரைக்குடி ஆவி. லெ. அருணசலச் செட்டியாரவர்கள் 'சமயமும் பெண்மணியும்' என்னும் விஷயத்தையும் மிக அழகாகவும், உருக்கமாகவும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். தலைவரவர்கள் அநேக விஷயங்களை எடுத்துக் காட்டித் தக்க சான்றுடன் முடிப்புரை பகர்ந்தார்கள். வந்தன வாழ்த்துக் கூற இரவு அ—௬0-க்கு மங்களகரமாக முற்றுப் பெற்றது. ௧உ-ம் நாள் பகல் உ-மணிக்கு காளையார் கோவில் தேவாரக் கோஷ்டியாரால் பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. மாலை ௫-மணிக்கு திருவாளர் காரைக்குடி ஆவி. லெ. அருணசலச் செட்டியாரவர்கள் தலைமையில் காந்தி நகர் பிச்சப்பா சுப்பிரமணியன் அவர்கள் 'சீர்திருத்தமும் பெண்கள் முன்னேற்றமும்' என்னும் பொருள் பற்றி உ—௬0-மணிநேரம் மிக எளிய நடையில் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தலைவரவர்கள் தக்க மேற்கோள்களுடன் முடிப்புரை பகர்ந்தார்கள். திரு வெ. சோமசுந்தரச் செட்டியாரவர்கள் வந்தனங் கூற இரவு அ-௬0 மணிக்குக் கூட்டம் மங்களகரமாக முற்றுப் பெற்றது என ஒரு அன்பர் எழுதுகிறார்.

நோட்டீஸ்.

சிவகெங்கை

டி. முன்சீபுகோர்ட்டு.

1927-ஞு O. S. No. 21-க்கு

1928-ஞு I. A No. 23.

வீரப்ப செட்டியார் — — வாதி

சோனைமுத்து சேர்வை — பிரதிவாதி

ஷெ நிம்பரில் தள்ளுபடியான பிருதை மறுபடியும் பயிலில் வைக்க வேணுமாய் வாதி மனுக்கொடுத்து 17-4-28-ந் உ வாய்தா ஏற்பட்டிருக்கிறது ஆக்ஷேபணையிருந்தால் அன்று பகல் 10 மணிக்கு இந்தக் கோர்ட்டில் ஆஜராகி தெரியப் படுத்த வேணும்.

வாதி வக்கீல்

எம். பொன்னுசாமி பிள்ளை,

26—3—28.

மதுரை

(நமது நிருபரிடமிருந்து)

ரம்ஜான்:— ரம்ஜான் பண்டிகை சென்ற சனியன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

மரணம்:— மதுரை தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் தலைவரும், பிரபலஸ்தரும், திருவாளர். பி. டி. இராஜன் பி. ஏ. பாரிஸ்டர். எம். எல். ஸி. அவர்கள் சிறிய தகப்பனருமான உத்தமபாளையம் திருவாளர். எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் கோய்வாய்ப்பட்டு சென்ற வியாழனன்று இரவு கக மணி சுமாருக்குக்காலமானார்கள். மறுநாள் பகல் க மணிக்குப் பிரேத அடக்கம் செய்யப்பட்டது. அன்று முனிசிபல் ஆபீசும் பாடசாலைகளும் மூடப்பட்டன. மயானத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் உபதலைவர் ஜனப். கா. ம. அலாவுதீன் இராவுத்தர் அவர்கள் பல பிரமுகர் முன்னிலையில் காலம்சென்ற முதலியார் அவர்கள் சரித்திரத்தை எடுத்துக் கூறினார்கள்.

அநுதாபக் கூட்டங்கள்:— திருவாளர். எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் காலஞ் சென்றதைக் குறித்து மதுரை திராவிட சங்கத்தாரும், மதுரை பொது ஜனங்களும், மருத்துவ சங்கத்தார்களும் கூட்டங்கள் கூடி நிறைவேற்றிய தீர்மானங்களைக் காலஞ்சென்றவரின் குடும்பத்தார்களுக்கு அனுப்பி யிருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியின் கூட்டம் க-ச-உஅ-ல் கூடும்.

வாடிப்பட்டி கொலை:— வாடிப்பட்டி கொலைக்கேஸ் இராமநாதபுரம் செஷன் கோர்ட்டில்நடைபெற்றது. நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஷை கேஸில் சம்பந்தப்பட்டிருந்த அ குற்றவாளிகளையும் கோர்ட்டார் விடுதலை செய்து விட்டார்கள்.

பூனையின் உண்ணாவிரதம்.

ஐரோப்பாவிலுள்ள ஆண்ட்வெர்ப் துறைமுகத்திலிருந்து மோட்டார் ஒன்று அனுப்பிய பெட்டிக்குள் பூனையொன்றும் தவறாக அடைபட்டு விட்டதாம். அப்பெட்டி பம்பாய்வந்து சேர மூன்று வாரங்கள் பிடித்தன. பெட்டியை உடைத்ததும் ஓர் மூலையில் பூனையொன்று உடல் மெலிந்த நிலைமையில் இருந்ததாம். அதைக் கண்டுபிடித்தும் சிறிது ஆகாரம் அளிக்கப்பெற்றது. சில தினங்கள் ஆகாரம் கொடுக்கப்பட்டதும் பூனை துள்ளிவிளையாட ஆரம்பித்து விட்டது. இப்பூனை சுமார் உ௫ தினங்கள் வரை எவ்வித உணவும் தண்ணீருமில்லாமல் ஜீவித்திருந் திருக்கிறது.

குமரன் வாரப் பதிப்பு.

உள் நாடு வருடம் க-க்கு	ரூ. 5 0 0
„ ஆறு மாதம்	ரூ. 3 0 0
வெளி நாடு வருடம் க-க்கு	ரூ. 6 0 0

குமரன் மாதப் பதிப்பு.

உள் நாடு வருடம் க-க்கு	ரூ. 1 8 0
வெளி நாடு „	ரூ. 2 0 0

தமிழகம்.

சில தினங்கள் முன் தூத்துக்குடியில் தீ விபத்தொன்றேற்பட்டு ௨௦ வீடுகள் வரை சேதமாயினவாம்.

திருவல்லிக்கேணி கோவில் குளத்தில் இரண்டொரு தினங்கள் முன் தனபாக்கியம் என்ற ஓர் பெண்மணி விழுந்திறந்து போனள்.

சில தினங்கள் முன் மதுரைச் சிம்மக்கல் ௬, ௪, ௫-வது தெருக்களில் பெரியதோர் தீ விபத்தேற்பட்டு ௬௫ வீடுகள் வரை சேதமடைந்தனவாம்.

நாளிது மார்ச் மாதம் உ௬-ந் தேதி காலை விருதுநகர் பெரியகடை பஜாரில் ஓர்கடையில் தீ விபத் தேற்பட்டு ரூ. ௨௦௦௦ வரை நஷ்ட மேற்பட்டதாம்.

திருவள்ளூருக்கு அருகாமையிலுள்ள லெவல் கிராஸிங்கில் இரண்டொரு தினங்கள் முன் ஓர்நாள் இரவு ஒருவர் ரயிலில் மோதுண்டு இறந்தார்.

சென்னை வண்ணாரப் பேட்டையிலுள்ள ஒரு சிறுமி, சில தினங்கள் முன் சமையலறையில் வேலை செய்து கொண்டிருக்கையில் உடையில் தீப்பற்றி வெந்து உயிர் துறந்தாள்.

சென்னைப் பெரிய மேட்டிலுள்ள ஒரு ஹோட்டலில் சில தினங்கள் முன் ஒருவர் பலகாரம் சாப்பிடச் சென்று இரண்டு இட்டலிகள் வாங்கி ஒன்றை விண்டுபார்க்க அதில் செத்த தேள் ஒன்று இருந்ததாம்.

மதுரை முனிஸிபாலிட்டியார் மாஜி சேர்மன் திரு எல். கே. துளஸிராம் அவர்கள்மீது தொடுத்திருந்த ஸர் சார்ஜ் வழக்கில் மதுரை சப் ஜட்ஜ் துளஸிராமுக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறிவிட்டார்.

தென்னிந்திய ரயில்வேயில் சிக்கனம் செய்யப்போவதைக் கண்டித்து ஒரு மகஜர் அனுப்ப வேண்டுமென்று தென்னிந்திய ரயில்வே எஞ்சினியரிங் ஒர்க் ஷாப் தொழிலாளர் சங்கத்தினர் தீர்மானித்திருக்கின்றனர்.

சென்னை யரசாங்கச் சட்ட அங்கத்தவர் பதவி மாஜி சட்ட சபைத் தலைவரும், சட்டக் கல்லூரித் தலைவராகத் தற்பொழுது இருந்து வருபவருமான திரு ரத்தினசாமியவர்களுக்குக் கிடைக்கக் கூடுமென்று சொல்லப்படுகிறது.

௧௯உ௫-ம் ஆண்டில் இத்தாலியரிடம் இருந்து சுமார் ஆயிரம் ரூபாய் பெறுமதியுள்ள நகைகளை வாங்கிக்கொண்டு ஓடிப் போய்விட்டதாக திரு அண்ணாசாமி அய்யர் என்ற கமிஷன் ஏஜண்டு ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

திருச்சினாப்பள்ளி தாலூகாவைச் சேர்ந்த சுமார் ௧௫ கிராமங்களில் காலரா நோய் கடுமையாகப் பரவி வருகிறதாம். புல்லம்பாடி என்ற ஒரு கிராமத்தில் மட்டும் ஒருவாரத்தில் ௧௫ பேர்களுக்கு இந்நோய் கண்டு ௬௬ பேர் மாண்டு போயினராம்.

சென்னைக் கவர்னரும் அவரது மனைவியாரும் டெல்லி சென்றுள்ளார்கள். சட்ட மெம்பர் பதவியைப் பற்றியும் மந்திரிகள் ராஜீநாமாவால் சேர்ந்துள்ள நெருக்கடியைப் பற்றியும் இராஜப் பிரதிநிதியுடன் கலந்து பேசும்பொருட்டே கவர்னர் சென்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

௧௯உ௬-உ௭-ம் வருஷ சென்னை அரசாங்க அறிக்கையில் ஜஸ்டிஸ் பத்திரிகையின் சந்தாதார்களின் தொகை குறைந்து போயிருப்பதாகக் குறிக்கப்பட்டிருப்பதை முன்னிட்டு இனி தகராறில் கொண்டு விடக்கூடியதாக விருக்கும் சந்தாதார்களின் தொகையைப் பற்றியும் இதர அபிப்பிராயங்களைப் பற்றியும் அரசாங்க அறிக்கைகளில் குறிப்பிடுவதில்லையென அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கின்றனராம்.

தஞ்சாவூரில் கோடைகால உஷ்ணம் தாங்கமுடியவில்லை யென்றும் தீ விபத்துக்கள் அடிக்கடி நிகழுகின்றனவென்றும் செய்தி யெட்டுகிறது.

சில தினங்கள் முன் தட்டப்பாறை ரயில் ஸ்டேஷனுக் கருகாமையில் ரயில் லயனில் கைகளும் கால்களும் வெட்டப்பட்ட முண்டம் ஒன்று கிடந்ததாம்.

சென்ற வியாழக்கிழமையன்று சென்னை சைதாப்பேட்டைக்கருகில் மண்வெட்டிக் கொண்டிருந்த ஓர் பெண் மண் சரிந்து அதில் புதைந்து இறந்து போனள்.

சேலத்தைச்சேர்ந்த அம்மாபேட்டையில் வாந்திபேதி நோய் கடுமையாகப் பரவி இருக்கின்றதாம். நகரசபையதிகாரிகள் நோய் பரவாதவாறு முன்னேற்பாடுகள் செய்து வருகின்றனர்.

கும்பகோணம் ஸ்ரீமதி ராஜ லட்சுமி எனும் பெண்ணைக் கடத்திச் சென்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு அபராதம் விதிக்கப் பெற்ற ராமச்சந்திர அய்யர் என்பார் அப்பீலில் விடுதலை செய்யப் பெற்றார்.

சென்னையில் மோட்டார் விபத்துக்கள் அதிகமாக நிகழ்ந்து வருகின்றன. கடந்த இரண்டு மூன்று தினங்களுள் ஏழெட்டு மோட்டார் விபத்துக்கள் நேர்ந்திருக்கின்றன வென்று செய்தி யெட்டுகிறது.

ரயில்பார்ஸலில் வந்த கூடைகளிலிருந்து முட்டைகளைத் திருடியதாகக் கூடலூர் ரயில்வே ஸ்டேஷனிலுள்ள ஒரு போர்ட்டருக்கு ௪ மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

மோட்டார் பஸ்கள் பிரயாணிகளை ஏற்றிக் கொள்ளும் பொருட்டுத் தெருக்களில் அலையக்கூடாதென்றும் பிரயாணிகள் மோட்டார்கள் தங்கியிருக்குமிடம் செல்ல வேண்டு மென்றும் புதுக்கோட்டைப் போலீஸ் கமிஷனர் உத்திரவிட்டிருக்கின்றார்.

நாங்குநேரி தாலூகாவில் கால்நடைகளின் தொத்துவியாதி அதிகமாயிருப்பதால் அந்தத் தாலூகாவில் கால்நடைகளுக்கெல்லாம் கட்டாயமாக அம்மை குத்தப்பட வேண்டுமென்று ஜில்லாக் கலெக்டர் அறிக்கை பிறப்பித்திருக்கிறார்.

கும்பகோணத்தைச் சேர்ந்த தேவனார் விளாகம் எனும் கிராமத்தில் வாழைக்குலை திருடியதாக துரைசாமி படையாச்சி எனும் ஓர் கிழவன் நையப்புடைக்கப் பட்டதால் இறந்துபோனனும். போலீஸார் இருவரை இதுபற்றிக் கைது செய்திருக்கின்றனராம்.

விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சோடாப்புட்டிகளில் கொசு, மோட்டுப்பூச்சி, எறும்பு, மயிர், குப்பை முதலியன இருந்ததாக சோடாக்கம்பெனிச்சொந்தக்காரரான திரு வைத்திலிங்கம் பிள்ளை என்பாருக்கு மாயவரம் பெஞ்சு கோர்ட்டார் ரூ. ௨௦ அபராதம் விதித்திருக்கின்றனர்.

தூத்துக்குடியில் முத்துக் குளிக்கையில் கீழக்கரைக் குளியாளரொருவர் கடலிற் சென்று முத்துக் கொழிக்கையில், அத்துறைப் பழக்கமும் மூறைப் பழக்கமும் அதிகமில்லாததால் மூச்சுத் திணறி குற்றுயிராய் மேலே வந்ததாகவும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்படுகையில் உயிர் துறந்ததாகவும் செய்தி யெட்டுகிறது.

புதுக்கோட்டை நகரில் நாளிது மார்ச்சு மாதக் கடைசியிலிருந்து மின்சார சப்ளை செய்யப்படு மென்றும், முனிசிபாலிட்டியால் அநேகமாக எல்லா தெருக்களுக்கும் மின்சார விளக்குகள் போட ஏற்பாடுகள் செய்யப்பெறுகின்றன வென்றும், சுமார் ௪௦௦ வீடுகளுக்குசப்ளை தற்காலம் செய்யப் படுமென்றும் தெரிகிறது.

வசந்தகாலத்திற்கு

சிறந்த வாசனையுள்ள காசிப்பூர் பன்னீர், சுகந்த பரிமள மைசூர் ஊதுவத்திகள், காரைக்குடி மைசூர் ஜவுளி வர்த்தகசாலையில் கிடைக்கும்.

(132)

பனி! பனி!! பனி!!!

குளிர் காலத்திற்கு அடக்கமான கம்பளிப் போர்வைகள் சுத்தமான உரோமத்தால் நம் நாட்டில் நெசவு செய்யப்பட்டவை. 6-முள நீளம் 3-முள அகலமும் அழகிய பல நிறங்களில் கிடைக்கும்.

நெம்பர் 1.	6 முள நீளம்	3 முள அகலம்	விலை ரூ. 15-0-0
நெம்பர் 2.	டை	டை	விலை ரூ. 12-0-0
நெம்பர் 3.	டை	டை	விலை ரூ. 10-0-0
நெம்பர் 4.	5×2½ அகலம் டை		விலை ரூ. 8-0-0
கம்பளித் தொப்பி நெ. 1	உருப்படி ஒன்றுக்கு		விலை ரூ. 3-8-0
டை நெ. 2	டை	,,	விலை ரூ. 2-8-0
டை நெ. 3	டை	,,	விலை ரூ. 2-0-0

Address:
Silk Pitamber Co.,
BENARES CITY.

விலாசம்:
பட்டு பீதாம்பர கம்பெனி
காசி.

(120)

மகாத்மா காந்திஜோசியர்.

தரும நியாயமான 5 கேள்விகளுக்கு 1. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 4. கடிதம் எழுதும்போதுள்ள நேரத்தைக் குறிப்பிடல் வேண்டும். எல்லாக் காரியங்களிலும் அனுகூலமான பலனைக் கொடுக்கும் "ஜய வசிகரணி" தாயத்து 1-க்கு ரூ. 1. ஸ்பெஷல் தாயத்து ரூ. 50. மற்றவிபரங்கட்கு நேரில் எழுதித் தெரிந்துகொள்ளவும்.

(112) ஆஞ்சநேய ஸ்வாமி ஜோதிடாலயம்,
தந்தி விலாசம்:— ஹனுமான். திருத்தணிகை, சித்தூர் ஜில்லா.

புதியவருஷக் கொண்டாட்டம். 15 இனாம் சாமான்கள்

ஒரு ஜோடி தாகர் லீவர் 18 காரட்டு ரோல்டு கோல்ட்டு கடியாரம் ஆர்டர் செய்கிறவர்களுக்கு இதில் கண்ட 15 சாமான்கள் இனாமாக கொடுக்கப்படும். முந்துங்கள். இனாங்களுடன் கடியாரம் விலை ரூ. 4—8—0 இச்சமயம் தவறவேண்டாம்.

விலாசம்:— ஸ்வான் ஹவுஸ்,
தபால்பெட்டி 508, பி. டி. மதறாஸ்.

(110)

The Madura Electric Company Ltd.
MADURA.
Rs. 10 Per share.

Please take shares in the above company. Very profitable concern. Apply for prospectus and application forms.

மதுரை எலெக்டிரிக் கம்பெனி லிமிடெட்
மதுரை.

ஷேர் 1-க்கு ரூபா 10—0—0.

தயவு செய்து மேற்படி கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது.

(126) பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

இனாம்! இனாம்!! இனாம்!!!
135 இங்கிலீஷ் தனித்தனி ரப்பர் எழுத்துக்கள் இனாம்.

[5-வருஷம் உத்திரவாதம்.] ராஜூ'ஸ் [ரிஜிஸ்டர் செய்தது.

தனித்தனி தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ. 5.

இந்தத் தமிழ் எழுத்துக்களடங்கிய பெட்டி ஒவ்வொருவரிடமும் அவசியமாயிருக்க வேண்டியது. ஏனெனில், தங்களுக்குத் தேவையான, விலாசங்கள் முதலியவைகளைத் தாங்களே அடுக்கிக்கொண்டு கார்டு, கவர், கடிதம் லேபில்கள் முதலியவைகளில் தமிழிலும் இங்கிலீஷிலும் தாங்களே அச்சிட்டுக்கொள்ளலாம். இந்தப் படத்தில் கண்டபடி அதாவது:- அஅஅஅஆஆஆஇஇஈஈஉஉஊஊஎஎஏஏஐஐஒஒ இம்மாதிரி தமிழ் எழுத்துக்களும், தமிழ் எண்களும், இங்கிலீஷ் நெம்பர்களும் ஸ்பேசுகளும், பூக்களும் உள்பட 450 ரப்பர் எழுத்துக்கள் அடங்கிய தகரப் பெட்டி 1-ம், இத்துடன் நான்கு வரிகளை அடுக்கக்கூடிய டைப் ஹோல்டர் பிடி 1, மைப்புட்டி 1, பிரஷ் 1, சிராவணம் 1, மை ஊற்றிய ஸெல்ப் இங்கிபாட் 1, ஒரு லைன் டைப் ஹோல்டர் 1 ஆக மொத்த சாமான்களும் அடங்கிய தமிழ் ரப்பர் எழுத்துப் பெட்டி நெ. 5 செட் 1-க்கு விலை ரூ. 5—8—0. மேல்கண்ட தமிழ் ரப்பர் எழுத்துப் பெட்டி 1 வாங்குபவர்களுக்கு 'குமரன்' பத்திரிகையில் கண்டதாக எழுதினால் A B C D E இம்மாதிரியான இங்கிலீஷ் எழுத்துக்களும், நம்பர்களும் உள்பட 135 தனித்தனி ரப்பர் எழுத்துக்களை இனாமாக அனுப்பப்படும். (மேற்படி இங்கிலீஷ் ரப்பர் எழுத்துக்கள் மாத்திரம் வேண்டுமானால் செட் விலை ரூ. 1—6—0) வி. பி. தபால் சார்ஜ் வேறு.

(121) எமது விலாசம்:— அ. ராஜூபிள்ளை அண்டு பிரதர்,
இந்தியாரப்பர் எழுத்துத் தொழிற்சாலை, 54, பஜார்ரோட், சூளை, மதறாஸ்.

உங்களுடைய விலைபெற்ற பொருள்களைப் பத்திரப்படுத்துவதற்கு இரும்புப் பெட்டி தேவையா? கனத்த தகட்டினால் செய்யப் பெற்ற கெட்டியான இரும்புப் பெட்டிகள் எங்களிடம் தயாராயிருக்கின்றன. ஆயிரம் வருஷத்துக்குமேல் இருக்கக்கூடிய அழியாதபொருள். இந்தப் பெட்டி யொன்றிருக்குமானால் நெருப்புக்கும் திருட்டுக்கும் பயமில்லை. அழகான வர்ணம்வைக்கப் பெற்றிருக்கின்றன. S. I. R. கம்பெனியாரால் — மதிப்பும் பெற்றிருக்கின்றன.

(122)

மு. அ. அண்டு அ. நா. அ.
இராமசாமிசெட்டியார் & கம்பெனி.
இரும்புப் பெட்டி உற்பத்திசாலை, நெ. 2/70, பிராட்வே, மதராஸ். சப்போ அ. கா. அ. கடையிலும், இரங்கூன் வயி.ராம. அரு. கடையிலும், உடுமலைப்பேட்டை அ. வீர. சித கடையிலும், ஆடர்கள் கொடுத்தும், இராமநாதபுரம் ஜில்லா கண்டனூர் அ. கா. அ. இராமசாமிசெட்டியார் வீட்டிலும் கிடைக்கும்.

காரைக்குடி கல்லுக்கட்டி, வடகரை

கிஷின் சந்த் செல்லாராம்

பட்டு மாளிகைக்கு

வாருங்கள்.

(137)

பற்பல உடைகளும், ஷர்ட்டிங், கோட்டிங் துணிகளும், பாவாடை, ரவிக்கைச் சீட்டிகளும், பட்டும் இன்னும் பற்பலவும், அங்கே கிடைக்கும். நாகரிகச் சரக்குகள், சாயம் கெட்டி, உறுதியானவை, நாட்பட நிற்பவை. எங்களிடம் ஒரே ஒரு தடவை வியாபாரம் செய்து பார்த்தால் லாபத்தையும் நயத்தையும் நலத்தையும் காண்பீர்கள்.

வெட்டுக்காயத்திற்கு

ஜா ரெக்ஸ். மணிக் கணக்கில் குணம்!

காரைக்குடி. மைசூர் ஜவுளி வர்த்தகசாலையில் வாங்கிய ஜாரெக்ஸ் மருந்தை வெட்டுக் காயத்திற்குப் போட்டதில் ஒரு மணி டய்த்திற்குள் குணமாகிவிட்டது. ஷை மருந்து வாய்வு சம்பந்தமான வீக்கத்திற்குப் போட்டதிலும் உடனே குணமாகிவிட்டது. மிகவும உயர்வான மருந்து.

(132) 4—11—27. மு. பழ. கண. கண்ணப்ப செட்டியார், கண்டரமாணிக்கம்.

அருமையான குளிகை! ஆச்சரியமான குணம்!!

உத்தரவாதமான வீரியவிருத்தி குளிகை.

மதனசந்த்ரா.

இனி உங்கள் கவலை தீர்ந்து விட்டது. எவ்வளவு நாள்பட்ட வெட்டையாயிருந்தாலும் சரி 5 தினத்தில் சொஸ்தம் செய்து விடும். இக்குளிகையானது தங்கம், பவளம், முத்து முதலிய விலையுயர்ந்த உலோக பஸ்பங்களைக் கொண்டும் மூலிகைகளைக் கொண்டும் தயார் செய்யப்படுகிறது. லாகிரி முதலிய பாஷாண சரக்குகளின் சம்பந்தம் இதில் கிடையாது. நரம்புத் தளர்ச்சி, பலஹீனம், கைகால் ஓச்சல், வெள்ளை, பலக் குறைவு, நீரோடு இந்திரியம் உடைந்து விழுதல், ஸ்வப்பன ஸ்கலிதம், சீக்கிரம் ஸ்கலிதம் முதலியவைகளை நிறுத்தி தேகாரோக்கியத்தையும் காந்தியையும் தரும். இதற்கு நிகரான மருந்து வேறு கிடையாதென்பதை நீங்கள் சாப்பிட்டதும் நீங்களே சொல்வீர்கள். இன்றே எழுதுங்கள். 100 மாத்திரைகள் அடங்கிய டின் 1-க்கு ரூ. 12—8—0. 50 மாத்திரைகள் அடங்கிய டின் 1-க்கு ரூ. 8—0—0. 20 மாத்திரைகள் கொண்ட மாதிரி டப்பி ரூ. 2—0—0.

தபால்செலவு தனி. வெளிநாட்டார் தபால் செலவையும் சேர்த்து முன்பணம் அல்லது பிரிடிஷ் போஸ்டல் ஆர்டர் அனுப்பிவைக்கவும். மற்றும் எல்லா சாஸ்திரீய மருந்துகளும் கிடைக்கும். விவரத்திற்கு எழுதவும்.

விலாசம்:— கேசரி வைத்தியசாலை, திருத்தணி, சித்தூர் ஜில்லா, தென்னிந்தியா.

(155)

உயர்ந்த தளமிட வேண்டுமாயின்,

Maw's தளக்கற்களை வாங்குங்கள்.

கிடைக்குமிடம்:—

ராவல் அண்டு கம்பெனி,
8, சகண்ட் லைன் பீச், சென்னை

கையில் கட்டும் ரோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும்
இனாம்! இனாம்!

நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கைகெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும். சரியான காலத்தைக் காட்டும். விலை ரூ. 6–8–0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்,
(117) 3, பார்க் டவுன், (கு) சென்னை.

லக்ஷ்மி டைல் ஒர்க்ஸ்.

சிமிண்டினால் நானாவித வர்ணங்களுடன்

பரப்பு கற்கள்.

சித்திரவேலை செய்த பலதினுசு

சதுரக் கற்கள்.

எங்களால் தயாரித்து விற்கப்பட்டு வருகின்றன.

குணத்திலும், உறுதியிலும், அழகிலும், நிகரற்றவை. ரெத்தினக் கம்பளம் விரித்ததுபோல் அலங்காரமாகஇருக்கும். பழக்கத்தினால் பளபளப்புக் கொடுக்கும். ஆரோக்கியத்திற்கு மிகவும் யோக்கியமானவை. இதர களிமண் கற்களைப்போல் ஈரிக்காது. மேல்மட்டம் சுத்தமாயிருப்பதால் தூசி அடையாது. அடிக்கடி புதுப்பிக்கவேண்டிய அவசியமில்லை. யாவரும் வாங்கி எல்லாவித கட்டிடங்களிலும் உபயோகிக்கலாம். பலதினுசு கற்கள் கைவசமிருக்கின்றன.

(1) கல்லின் அளவு 6 அங்குல சதுரம். ஒரு சதுர கஜத்திற்கு 36 கற்கள்.
(2) கல்லின் அளவு 8 அங்குல சதுரம். ஒரு சதுர கஜத்திற்கு 20 கற்கள்.

(108)

V. குப்புஸாமி அய்யர், (புரோப்ரைட்டர்.) லக்ஷ்மி டைல் ஒர்க்ஸ், புதுக்கோட்டை.

சிறு பெண்ணும் சமைக்கலாம்.
கைக்கு லேசாயும் இலகுவாயும் இருப்பதால் இந்த

ருக்மணி குக்கர்.

அடுக்கைக்கொண்டு சிறுபெண்கூட நல்ல சமையல் செய்யலாம்.
ஐந்து அளவுகளில்
1, 2, 4, 6, 8 பேர்களுக்குத் தகுந்த ரூ. 13, 18, 22, 27, 33-ல் கிடைக்கும். ரயி[illegible]கூலி வேறு.
விபர புத்தகம் [illegible]ம்.
ஏஜெண்[illegible] தேவை.

ருக்மணி குக்[illegible] கம்பெனி.
(111) ராய[illegible]புரம், சென்னை.

இனாம்! இனாம்!!
சாரவிவேகி சதா நந்தன் சம்பாத[illegible]
"கிழவன் குமாரனான்" இவ் வி[illegible]
கதைகள் அடங்கிய புத்தகம்
விலாசம் தெரிவித்தா[illegible]
புவோம்.
ஸ்ரீ சாது இரத்தின[illegible]
(116) பார்க் ட[illegible]

வெயில் காலம் வந்து விட்டது.

தண்ணீர்

குழாய் பிட்டப் செய்து கொண்டால் ஜலக்கஷ்டம் ஒழியும். பவர்ஹௌஸ் உள்ள இடங்களில் மோட்டார் பிட்டப் செய்திருக்கிறோம்.

ஐஸ்

பானம் சாப்பிட்டால் அதிக நன்மை உண்டாகும். ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

ராஜன் அண் கோ,
60, தளவாய் அக்ரஹாரம், மதுரை.

ராஜன் அண் கோ,
ஐஸ் ஹௌஸ், தேவகோ[illegible]

(127)

போலிச் சரக்கைப் பார்த்து மோசம் போகாதீர்கள்.

அமிர்தாஞ்சனம்

(150) எல்லா நோய்களுக்கும் திவ்விய ஔஷதம்.

அ றி வி ப் பு.

நமக்கு இனி சென்னையில் ஏஜண்டு கிடையாது.

இதுவரை நமது பிராஞ்சு வைத்தியசாலை சென்னை பவழக்காரத் தெரு, 6/99 நெம்பர் வீட்டில் வைக்கப்பட்டிருந்ததை எடுத்துவிட்டோம். 1928-ம் ௵ மார்ச்சு ௴ முதல் தேதி முதல், சென்னை பிராட்வே 29-ம் நெம்பர் பங்களாவில், புதிதாக சகல மருந்துகளுடன் ஒரு பெரிய வைத்தியசாலையை ஸ்தாபித்திருக்கிறோம். இனி நமது பிராஞ்சு வைத்திய சாலைக்கு அனுப்பப்படும் கடிதங்கள், இன்ஷியூர்கள், ரிஜிஸ்டர்கள், மணியாடர்கள் முதலியவைகளை எல்லாம் நமது பேருக்கே அனுப்ப வேண்டியது. விலாசம்:— ஆர். எம். கே. வேலுசாமிபிள்ளை, சித்தவைத்தியசாலை,

ஹெட் ஆபீஸ்:—பழனி.   29, பிராட்வே மதராஸ்.   டெலிபோன் நெ. 3111.

குறிப்பு:—நாம் மார்ச்சு மாதம் 31-ம் தேதி வரையில் சென்னையில் தங்கி இருப்போம். அனேகர் நம்மை நேரில் கண்டு வியாதிகளைக் காட்டி இன்ன வியாதிக்கு இன்ன மருந்து என்று தெரிந்து நமது கைப்பட மருந்து வாங்க வேண்டுமென்றும், சிலர் வேலைத் தொந்தரவாலும், பணச் செலவைக் கருதியும் பழனிக்கு வரமுடியாமல் தயங்குகிறார்கள். சிலர் நேரில் பார்த்தே மருந்தை வாங்கவேண்டுமென்றும் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் வேண்டுகோளுக்கிசைந்து மாதம் 1-க்கு 120 ரூபாய் வாடகையில் பிராட்வே 29-ம் நெம்பர் பங்களாவை ஒரு வருஷத்திற்கு வாங்கி டெலிபோன், மின்சார விளக்கு, விசிறி முதலிய சௌகரியங்களுடன் அமைத்திருக்கிறோம். மேல் மாடியில் நோயாளிகள் தங்கி மருந்து சாப்பிட வசதிகளும் இருக்கிறது. பிரபுக்கள் நேரில் வரலாம்.

(113)

லேவாதேவி.

செய்பவர்களுக்காக (வட்டிப்பிரகாசிகை) புஸ்தகம் வெகு சுலபமாக வட்டிச் சிட்டை தயாரிக்கவும் சரிபார்க்கவும் புதியமாதிரியில் தயாரித்து லேவாதேவியில் பிரபலஸ்தர்களால் பரிசோதிக்கப் பெற்று சரிபார்த்துமிருக்கிறது: இதில் நாள் கூஉ-க்கு மாதரூபிப்பக்கங்களும் ௬00-க்கு காலணு முதல் பனிரெண்டு ரூபாய் வட்டிவரை வட்டிப்பக்கங்களும் ஒவ்வொரு பக்கங்களிலும் பத்துலெக்ஷ ரூபாய்வரை யெர்தத்துகையானாலும் சில்லரைத்துகை சேர்ந்திருந்தாலும் அந்தந்தத்துகைகளுக்குநேறில் மாதரூபியோ-வட்டியோ அப்படியே பார்க்கலாம் சரிஞள்வட்டி தவணைவட்டி-பாங்கி வட்டி அசல் ரெட்டிப்பு முதலிய கணக்குகளும் ரொம்ப சுலபமாகப் பார்க்கலாம். தபால் செலவு இனும். விலை ரூ 3. வி. பி. இல்லாத ஊர்களிலிருந்து முன் பணம் வரவேண்டும்.

நா. சு. லெக்ஷ்மணய்யர்,
வெள்ளையனூரணித் தெரு,
(125) தேவகோட்டை.

Continental

பலூன் & ஹெவி சர்வீஸ் டயர்கள்.

எல்லா இடங்களிலும் திப்ருதிகரமாய் உழைக்கிறது, அவை எந்த ரோட்டுகளுக்கும் நன்ருய் உழைப்பதால், பரீக்ஷித்துப்பாருங்கள்.

(135)

யுனைடெட் இந்தியா லைப்

அஷ்யூரான்ஸ் கம்பெனி,

(லிமிடெட்.)
தலைமை ஆபீஸ்—மதராஸ்.
ஸ்தாபனம் 1906-ம் ௵
சென்னை மாகாணத்திலுள்ள லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி இதுவே.
அக்கிராசனர்:—
ஸர். எம். ஸி. டி. முத்தையா செட்டியார் K. T., M. L. A.
சமீபத்தில் 5 வருஷத்திற்கென்று விநியோகிக்கப்பட்ட
போனஸ் அஷ்யூரென்ஸ் தொகை ரூ 1000-க்கு ரூ 75.
ப்ரிமியம் மிதமானது.   நிபந்தனைகள்—சுலபமானவை.

கிரேஸ் டயம் கொடுப்பதை ஒத்திவைப்பது—இதில் ஓர் விசேஷம் பாத்தியதைகளை உடனே கவனிப்பது—ஓர் முக்கிய அம்சமாகும் "இந்தியாவிலே மிகவும் உறுதியானதும், பணத்தை யுடையதும், மேலான நிர்வாகத் திறமையுடையதும் மிகச் சிக்கனத்துடன் கூடியதுமான க... ...ளிகளில் இதுவுமொன்று. லைப் அஷ்யூரான்ஸ் கம்பெனிகளி... ...மையானவற்றில் இது ஒன்றாகும்" என்று "பார்வார்டு" வருஷ... ...ந்தப் பிரசுரத்தில் காணப்படுகிறது. விவரங்... அடியிற் கண்டவருக்கு எழுதவும்.

எம். ராமமூர்த்தி, சீப் ஏஜெண்டு, ராமநாதபுரம் அண் புதுக்கோட்டை, காரைக்குடி.
மானேஜர்:— ஸ்டார் அண் கம்பெனி,
(140)

வியாபாரத்தில் விர்த்தியடைய விருப்பமா?

இந்த புத்தகத்தை வாங்கி வாசியுங்கள்.

தமிழில் இதுவரை வெளிவாரதது.

இனிய, எளிய தமிழ் பாஷையில், $6\frac{3}{4} \times 4\frac{1}{4}$ அங்குல அளவுள்ள கிளேஸ் காகிதத்தில் சித்திர சகிதமாய்ப் பதிப்பிக்கப்படுவது. 200 பக்கங்கள். விலை ரூ 1. தபாற் கூலி அணா 4. சீக்கிரம் முன் பணமனுப்பிப் பதிவு செய்துகொள்க.

ஒவ்வொரு வியாபாரியும், தொழில் அதிபரும் தங்கள் வியாபாரத்தையோ தொழிலையோ விளம்பர வழியினுல் சொற்ப செலவுடன் மேலான விர்த்திக்குக் கொண்டு வரவும், புதிய வழிகளில் விளம்பர மூலமாய் வியாபாரத்தைப் பெருப்பிக்கவும் சுலபமாய்க் கற்பிக்கும்,

வியாபார விர்த்தி விளம்பர யுக்தி,

என்னும் நவீன விளம்பர நூல். தற்கால வியாபாரத்தையொட்டி எழுதப்பட்டிருக்கும் சிறந்த நூல். விளம்பர வித்தையைக் கற்றுத் தேறி அதில் ஊடாடிவரும் ஒருவரால் நூதனமாய் இயற்றப் பெற்றது. ஒவ்வொரு வியாபாரத்துக்கும் தொழிலுக்கும் அவசியம் வேண்டியது.

விளம்பர விகிதம் பக்கம் ரூ. 15—0—0.

பிரசுரகர்த்தாக்கள்:—
மாடர்ன் பப்ளிசிடி கம்பெனி, 15 அரமனைக்காரத் தெரு, சென்னை.
(130) Modern Publicity Co., 15 Armenian St., Madras.

வியாபாரத்தின் சூக்ஷமம் விளம்பரமே.
குறைந்த விகிதத்திற்கு குமரனில் விளம்பரம் செய்யுங்கள்.

குடும்பத்துக்கோர் பொக்கிஷம்!

சில மாதங்களுக்குள்

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

11,000 பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன. ஒருவர் வாங்கிப்படித்தால் அவர் தம் நண்பர்கள் யெல்லோரையும் வாங்கும்படித் தூண்டுகிறார். எனவே இந்தப் புத்தகத்திற்கு உள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தொிந்து கொள்ளலாம்.

இல்வாழ்வை நல் வாழ்வாக,

நடத்த உத்தேசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் கையில் இந்நூலின் பிரதி யொன்று இருந்தே தீரவேண்டும்

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

மூன்றும் பதிப்பு விலை ரூ. 2-0-0

ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரியிடமும் கிடைக்கும். போலிப் புஸ்தகங்களை வாங்கி ஏமாறுதீர்கள். புஸ்தகத்தின் பேரில் "வாஸன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கிறதாவென்று பார்த்து வாங்குங்கள்.

எமது விலாசம்

(124)

வாஸன் புஸ்தகசாலை,

டெலிபோன் நெ. 3311   244, தங்கசாலை வீதி, தபால்பெட்டி 119, மதருஸ்.



ஆச்சரிய ஜோதிடம்.

தென்னாட்டில் தலைமைபெற்றுப் பிரகாசிக்கும் சோதிடாலயம் இதுதான். தங்களின் சரியான எதிர்காலப் பலனைத் தெரிந்து பதில் எழுத 6 கேள்விகளுக்கு ரூ 1. மேற்கண்ட ஒவ்வொரு கேள்விக்கும் தனித்தனி அணா 4. பிரஸ்னை கேட்கும்போதுள்ள கோத்தையாவது ஜாதகக் குறிப்பையாவது குறிப்பிட்டு எழுதவும். ஒரு வருஷப் பலன் ரூ 2. இன்னும் மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

சர்வ ஜய வசீகரணி.

தாயித்து 1-க்கு ரூ 2—8—0. எல்லாவிதமான காரியங்களும் ஜெயம் பெற்று வருவது நமது ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுளின் சர்வ ஜய வசீகரணி தாயித்துதான், மற்ற விபரங்களுக்கு இன்றே எழுதி ஜயம் அடையுங்கள்.
தாபல் செலவு வேறு.

T. Saravanam, Manager.
மானேஜர், ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஜோதிட நிலயம்.
(134) திருத்தணி. (சித்தூர் ஜில்லா.)

...க்டர் தாமஸ் வருகீஸ், சி. டி. எஸ்.,
...நாய் வைத்திய நிபுணர்.
...வே சிலோனில் இருந்தவர்.)
மேல்கரை, காரைக்குடி.
...ய்களுக்கும் வைத்தியம் செய்பவர்.
...சஷ யோக்கியதை கோண்டவர்.
...ல் பல் எடுக்கப்படும்.
...படும்; பற்கள் சுத்தம்
...மைக்கப்பெறும்.
...se, C. D. S.
...ARAIKUDI.

END OF ISSUE